கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
4-3-1973
30 காசு





உங்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் கீழ்க்கண்ட நூல்கள் 56ன் விலை ரூ. 84.

1973 ஏப்ரல் முடிய ஒரு சலுகை

ரூ. 67 அனுப்புங்கள். எங்கள் செலவில் புத்தகங்கள் 56யும் அனுப்பித் தருகிறோம்.

நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள் - 44

மகாத்மா காந்தி
மோதிலால் நேரு
ஜவகர்லால் நேரு
சித்தரஞ்சன் தாஸ்
இராஜாராம் மோகன்ராய்
மகாதேவ கோவிந்த ரானடே
இராஜேந்திர பிரசாத்
ஸி. எப். ஆண்ட்ருஸ்
சரோஜினி தேவி
சுரேந்திரநாத் பானர்ஜீ
சுபாஷ் சந்திர போஸ்
வல்லபாய் படேல்
மதன் மோகன் மாளவியா
மகாதேவ தேசாய்
லாலா லஜபத் ராய்
கோபால கிருஷ்ண கோகலே
பால கங்காதர திலகர்
லால்பகதூர் சாஸ்திரி
தாதா பாய் நௌரோஜி
இந்திரா காந்தி
வீரபாண்டிய கட்டபொம்மன்
சுப்பிரமணிய பாரதியார்
வ. உ. சிதம்பரம் பிள்ளை
இராமலிங்க சுவாமிகள்
எஸ். இராதாகிருஷ்ணன்
இரவீந்திரநாத் தாகூர்
இராமகிருஷ்ண பரமஹம்சர்
சுவாமி விவேகானந்தர்
ஜான்ஸி ராணி
ஈசுவர சந்திர வித்யா சாகர்
லியோ டால்ஸ்டாய்
கஸ்தூர்பா காந்தி
அண்ணாதுரை
அரவிந்தர்
சிவாஜி
டாக்டர் அம்பேத்கார்
சத்தியமூர்த்தி
ராஜாஜி
பகத்சிங்
ரமண மகரிஷி
வீர சாவர்கர்
குரு நானக்
அன்னி பெசண்ட்
திரு வி. கல்யாணசுந்தரனார்


அறிவியல் அறிஞர்கள்-12

தாமஸ் ஆல்வா எடிசன்
பெஞ்சமின் பிராங்க்லின்
லூயி பாஸ்டியர்
ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்
மேரி கியூரி
ஐசக் நியூட்டன்
ஜேம்ஸ்வாட்
ரூதர் போர்டு
ரைட் சகோதரர்கள்
ஜகதீச சந்திரபோஸ்
நிக்கோலா டெஸ்லா
எட்வர்டு ஜென்னர்

பழனியப்பா பிரதர்ஸ்
14, பீட்டர்ஸ் சாலை, சென்னை-600014
திருச்சி-2, சேலம்-1, கோயமுத்தூர்-1, மதுரை-1

மணி & மினி

"…பா, தெருவிலே புதுசா மாட்டி
…க்கிற சீட்டு தினம் ராத்திரி
…தூக்கத்தைக் கெடுக்கிறதுன்னு
…ன்னே இல்லே ?......"




கோகுலம்

மலர் 1 :: இதழ் 21

பிப்ரவரி 4, 1973

பரிதாபி, தை 22



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்


— பாரதியார்

அட்டைப் படம்:

"நாயே உனக்குக்
கோபம்... ஆகாதடி"

வண்ணப்படம் :

எஸ். என். ராவ்



"என்னப்பா நீ! சாதாரணமாத்
தானே கூப்பிட்டே...
கோபமாக் கூப்பிடல்லியேன்னு
நான் உடனே வரல்லே!"

எழில் கொஞ்சும் எடுப்பான உருவம்

எந்த உறுப்பும் ஆற்றலின் வடிவம்!

2-பாண்டு பிலெட்டா

[illegible]



புதிய பிலெட்டா

2-பாண்டுகள். ரூ. 177/-
எக்சைஸ் உட்பட மற்ற வரிகள் தனி

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட

[illegible]

CMPR-213-162 Tam



ஆத்திசூடி ராஜாஜி



பீடுபெற நில்

பீடு — பெருமை.

எந்த நிலையிலும் பெருமை அடையும்படியே பேச்சும் செயலும் இருக்க வேண்டும். பெரும் பதவியோ, பெருஞ் செல்வமோ அல்லது தாழ்வோ வறுமையோ அடைந்தாலும் இழிவான செயல்களைச் செய்யக் கூடாது. கால பேதங்கள் உண்டானாலும் இவன் பெருங் குணத்தை உடையவன் என்று பிறர் சொல்லும் வகையிலேயே நாம் மாறாமல் நிற்க வேண்டும்.

புகழ்ந்தாரைப் போற்றி வாழ்

புகழ்ந்தார் — உலகம் புகழ்ந்தார் — பெரியவர்கள். அப்பெரியவர்களைக் காப்பாற்றுவாய். உன் வாழ்வை நடத்துவதுடன் உலகம் புகழும் பெரியவர்களுக்கு வேண்டிய உதவி உன்னால் ஆன அளவுக்குச் செய்து அவர்களைப் பசியும் பிணியும் வருத்தாமல் பாதுகாப்பாயாக.

பூமி விரும்பு

நீ பயிரிடும் புலத்தின் மேல் அன்பு செலுத்து. அதாவது அதைச் சரியாய்ப் பாதுகாத்து வருவாய். உரம் போட்டு உழுது சீர்திருத்தி வர வேண்டும்.

பெரியாரைத் துணைகொள்


பெரியோர் என்றால் இயற்கையாக உயர்ந்த குணம் படைத்தவர்களும் வயதினால் வரும் உலக அனுபவத்தாலும் கல்வி, கேள்விகளாலும் அறிவு அடைந்தவர்கள். பெரியோர்களை அடைந்து அவர்களுடைய உபதேசம், உதவி இவைகளைக் கொள்வாயாக.

பேதைமை அகற்று

பேதைமை — உலக அனுபவத்தால் நீங்கும் அறியாமை.

ஜனங்களுடன் பழகியும் மற்ற வழிகளிலும் உலக அனுபவம் அடைந்து அறியாமையை நீக்கிக் கொள்வாய்.







படுத்திருந்தார்கள். மறுபடியும் படுத்துத் தூங்கிற்று.

மறுபடியும் தான் நாயாகி விட்டதாகக் கனவு கண்டது.

ஒரு திருடன் வந்தான். 'வள்' 'வள்' என்று கத்துவதற்குப் பதிலாக 'மியாவ்' 'மியாவ்' என்றது. யாரும் எழுந்திருக்கவில்லை. திருடன் வீட்டுக்குள்ளே புகுந்து சாமான்களையெல்லாம் எடுத்தான். பால் பாத்திரத்தை எடுத்துப் பாலைக் கீழே கொட்டிவிட்டுப் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டான்.

திருடனை மறந்து விட்டுக் கீழே சிந்திப்போன பாலைப் பூனை நக்க ஆரம்பித்தது. வீட்டுக்காரி எழுந்திருந்து, 'இந்த நாய் உபயோகமில்லை' என்று துடைப்பக்கட்டையை எடுத்து ஓர் அடி போட்டாள். அடி பட்டதாகக் கனவு கண்டதும் பூனை விழித்துக் கொண்டது.

''நல்ல வேளை, நான் நாயல்ல!'' என்று சந்தோஷப்பட்டது. ஓடி வீட்டுக்காரியின் கால்களைச் சுற்றிக் கொண்டும் உராய்ந்து கொண்டும் அன்பு காட்டியது. ''புலியும் வேண்டாம்; நாயும் வேண்டாம். நான் பூனையாகவே இருப்பேன்'' என்று 'மியாவ்', 'மியாவ்'- என்று சந்தோஷமாகக் கத்திற்று.

அது சொன்னது வீட்டுக்காரிக்குத் தெரியவில்லை. பூனையின் பேச்சுக்கள் நமக்கு விளங்காது. அதன் குட்டிகளுக்குத்தான் விளங்கும். 'அதுவே சரி!' என்று குட்டிகள் மூன்றும் கத்தின.

தெரிந்து கொள்ளுங்கள்

லேஸர் கதிர்

லேஸர் கதிரைப் பற்றி நாம் இப்போது அடிக்கடி கேள்விப்படுகிறோம். விஞ்ஞான ஆராய்ச்சி, செய்தித் தொடர்பு, விண்வெளி ஆராய்ச்சி மற்றும் மருத்துவத் துறைகளில் லேஸர் மிகவும் பயன்படுகிறது. லேஸர் (LASER என்ற பெயரே ஓர் ஆங்கில சொற்றொடரின் முதல் எழுத்துக்களால் ஆனதுதான். Light, Amplification by Stimulated, Emission, of Radiation லேஸர் கண்டுபிடிக்கப் பட்டு ஏறத்தாழ பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன.

நிலவுக்கு இங்கிருந்து அனுப்பப்படும் ரேடியோ, மற்றும் டெலிவிஷன் அலைகளைத் திருப்பி அனுப்ப லேஸர் உதவுகிறது. மிகவும் கெட்டியான பொருள் என்று கருதப்படும் வைரத்தில் லேஸரைக் கொண்டு சுலபமாகத் துளையிடலாம். உலோகங்களை வெல்ட் (WELD) செய்யவும் புற்று நோய் செல்களை அழிக்கவும் லேஸர் உதவுகிறது.

லேஸரின் முன்னோடிக்கு மேஸர் Microwave Amplification by Stimulated Emission of Radiation என்று பெயர். லேஸரும் ஒரு விதமான கதிரே. மற்ற கதிர்களுக்கும் லேஸருக்கும் என்ன வித்தியாஸம்? உதாரணமாக சூரிய ஒளிக் கதிரை எடுத்துக் கொள்ளுவோம். சூரிய ஒளி ஏழு வண்ணங்களால் ஆனது. ஆனால் லேஸரில் இப்படிப்பட்ட வண்ணச் சேர்க்கை இல்லை. சூரிய ஒளியும் மற்ற கதிர்களும் பரந்து செல்வன. ஆனால் லேஸர் ஒரே அலை வரிசையில் ஒழுங்காகச் செல்லும். லேஸரை, ஒருங்கிணைந்த ஒளி (Coherent light) என்று அழைப்பதுண்டு.


உங்களிடம் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு டார்ச் விளக்கு இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அந்த விளக்கை நீங்கள் நிலாவை நோக்கித் திருப்பிப் பித்தானை அழுத்துகிறீர்கள். டார்ச்சின் ஒளி நிலாவின் மீது விழுவதாக வைத்துக்கொள்ளுவோம். டார்ச்சின் ஒளி வட்டம் எத்தனை பெரியதாக இருக்கும் தெரியுமா? அந்த ஒளி வட்டத்தின் விட்டம் சுமார் 25000 மைல் நீளமுடையதாக இருக்கும்! ஆனால் லேஸர் கதிர் எவ்வளவு அகலத்துக்கு அனுப்பப்படு-கிறதோ அதே அளவில்தான் நிலவைச் சென்று அடையும். அது விரிவடைந்து கொண்டே இருப்பதில்லை.

லேஸரின் சக்தியும் மிகவும் அதிகம் தான். ஒரு சதுர சென்டிமீட்டருக்குக் கோடி கோடி வாட்டுகள் (Trillion walts) என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அதனால்தான் பரமசிவன் நெற்றிக் கண்ணைப் போல லேஸரால் எதையும் அழித்துவிட முடிகிறது. ஆனால் லேஸரும் பரமசிவனின் நெற்றிக் கண்ணைப் போல தீயவைகளை, உதாரணமாக புற்று நோய் உயிரணுக்களை, அழித்து மனிதனுக்கு உதவி புரிகிறது. இன்னும் பல உதவிகளை மனிதனுக்குப் புரிய லேஸர் கதிர் காத்திருக்கிறது. -ஏ. சங்கரன்

தோன்றிற் புகழொடு...

முரளி

உலகப் புகழ்பெற்ற அறிஞர்களும் மேதைகளும் சிறிய வயதிலேயே 'முளையில் தெரியும் பயிராக'த் தங்கள் திறமையைக்காட்டியிருக்கிறார்கள் என்பது தெரியுமா உங்களுக்கு? இவற்றைப் படித்தபின் 'நாமும் அவர்கள்மாதிரிபுகழுடைய 'வேண்டும்' என்ற எண்ணமும் உற்சாகமும் உங்களுக்கு ஏற்படுவது நிச்சயம்!



★ மெக்காலே பிரபு இங்கிலாந்து நாட்டின் பிரதம மந்திரியாகிப் பல அரிய சேவைகளைச் செய்து புகழ் பெற்றவர். சிறு வயதில் 'ஆயா'வுக்கே தான் கதை சொல்வார்! பத்து வயதுக்குள் 'மில்டனி'ன் ஆயிரக் கணக்கான வரிகளையுடைய கவிதைத் தொகுப்புக்களை மனப்பாடம் செய்து முடித்து விட்டார்.



★ குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்த பந்து ஒரு பெரிய குழிக்குள் போய் விழுந்து விட்டது. எப்படி எடுப்பதென்று புரியாமல் அனைவரும் விழிக்கும்போது ஒரே ஒரு சிறுவன் மட்டும், ''ஐந்தே நிமிடங்களில் நான் அதை எடுக்கிறேன், பாருங்கள்'' என்று கூறிவிட்டு ஓடிப்போய் ஒரு வாளியில் தண்ணீர் கொண்டு வந்தான். அதைக் குழியில் கொட்ட இலேசான பந்து மிதந்து குழிக்கு மேலே வந்தது. அச்சிறுவனை அனைவரும் பாராட்டினார்கள். அந்தச் சிறுவனின் பிற்காலப் பெயர்: **பாபு ராஜேந்திர பிரசாத்.**

★ குதிரை வியாபாரி ஒருவன் ஒரு பெரிய குதிரையைக் காட்டி அரசனிடம் ''இதுவே என்னிடமுள்ள குதிரைகளில் சிறந்தது. இதை அடக்க ஒருவராலும் முடியாது'' என்கிறான். பல வீரர்கள் முயலுகிறார்கள். குதிரை கீழே தள்ளி விடுகிறது. ''நான் அடக்குகிறேன்'' என்கிறான் பத்து வயதே ஆன அரசகுமாரன். எல்லாரும் திடுக்கிடுகிறார்கள். அரசன் முதலில் மறுத்து, பிறகு அரை மனதுடன் சம்மதிக்கிறான். அரசகுமாரன் அதை அடக்கியதும் அனைவரும் அதிசயிக்க அவன் சொன்னான்: ''நீங்களெல்லாம் முயன்றபோது குதிரை தன் நிழலைப் பார்த்தே மிரண்டது. அதனால் தான் நான் அதைச் சூரியனை எதிர் நோக்கி நிறுத்திச் சுலபத்தில் அடக்கினேன்.'' அந்த அரசகுமாரன்தான் மாவீரன் **அலெக்ஸாந்தர்.**







★ **கவியரசர் தாகூர், கவிக் குயில் சரோஜினி நாயுடு** ஆகியோர் அற்புதமாகக் கவிதை புனைய ஆரம்பித்தபோது அவர்களது வயது என்ன தெரியுமா? பதின்மூன்று தான்!



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்த வாரியார்

ஒரு நாள் கோபால மகாஜனங்கள் கண்ணபிரானுடைய அதியற்புதமான பெருமைகளை நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தார்கள். அந்த ஆனந்த மிருதியால் நந்தகோபரை நோக்கிக் கூறுவார்கள்.

''எங்கள் குலபதியே! குணநிதியே! தங்கள் குமாரனாகிய கிருஷ்ணன் மனிதக் குழந்தையல்லன். பரம்பொருளே வந்து அவதரித்துள்ளது. முப்பது நாட்கள் நிறைவுபெறு முன்னர் வேதனை தர வந்த பூதனையை இவர் வதைத்தருளினார். மூன்று மாத பருவத்தில் வண்டியாக உருண்டு வந்த சகடாசுரனை, பவளம் போன்ற தம் பாத தாமரையால் உதைத்துச் சிதைத்தருளினார். சுழல் காற்று வடிவாக வந்த த்ருணாவர்த்தனை மாய்த்தார். கன்று வடிவமாக வந்த வத்சாசுரனைச் சாய்த்தார். கழுதை வடிவாக உலகுக்கு இடர் புரிந்த தேனுகாசுரனைக் கொன்று அருள் புரிந்தார். நஞ்சினைப் பொழிந்து நான்கு திசைகளையும் நடுங்க வைத்த நாக ராஜனாகிய காளியனை அடக்கி அவன் மணி மகுடத்தின் மீது நடனம் ஆடியருளினார். இந்திரன் பொழிந்த மழைக்கும் இடிக்கும் கோவர்த்தன மலையை ஒரு திருவிரலால் தாமரை மலரை ஏந்துவது போல் ஏழு நாட்கள் குடையாகப் பிடித்து நம்மையெல்லாம் காத்தருளினார். ஆதலால் இவர் வைகுண்டவாசனாகிய நாராயணரேயாகும். நீர் செய்த அரிய பெரிய தவத்தால் உங்களிடம் குழந்தையாக வளர்கிறார். இப்பரமபதியுடன் நாங்கள் பாடியும் ஆடியும் கூடியும் மகிழ்ச்சி அடைகின்றோம். எங்கள் தவம் இருந்தவாறு என்னே?'' என்று கூறி வியந்தார்கள்.

நந்தகோபர் ''யதுகுல உத்தமர்களே! முன்னே கர்க்கமா முனீந்திரர் என்னிடம் இரகசியமாகச் சொல்லியிருக்கின்றார். ஆராவமுதம் அமரர்க்கருளிய நாராயணரே கிருஷ்ணர் என்று உணர்த்தியுள்ளார். இது தேவ ரகசியம். இதனை வெளியிடக் கூடாது'' என்றார்.

இவ்வாறு அவர்கள் எம்பெருமானைப் பரமபதி யென்று அறிந்து விஷ்ணு மாயையால் மானுடக் குழந்தையாக எண்ணி வாழ்ந்தார்கள்.

நந்தகோபர் வருணலோகம் போய் மீண்டது

அன்று ஏகாதசி: நந்தகோபர் உபவாசம் இருந்து திருமாலை வழிபட்டார். துவாதசியன்று நடு இரவு. நந்தகோபர் விடியற்காலை என்று கருதி யமுனையில் நீராடச் சென்றார். யமுனை நதியில் இறங்கி முழுகினார். வருணனுடைய சேவகன் அவரை ஈர்த்துக் கொண்டு போய் வருண லோகத்தில் சேர்த்தான்.

யாதவர்கள் தங்கள் தலைவனாகிய நந்தகோபனைக் காணாது சிந்தை கலங்கி நொந்து மனம் வாடினார்கள். நான்கு திசைகளிலும் அவர்கள் தேடினார்கள்; எங்கும் ஓடினார்கள். காணாது வாடினார்கள். கண்ணபிரானிடம் வந்து கை கூப்பி நின்று, ''எம்பெருமானே! எங்கள் குலத்தலைவராம் உமது தந்தை சென்ற இடம் தெரியவில்லை'' என்று கூறி முறையிட்டார்கள்.

பகவான் தமது யோகக் கண்ணால் நந்தகோபர் வருண லோகம் சென்றதை உணர்ந்தார். உடனே வருண லோகம் சென்றார். வாசுதேவருடைய வரவை அறிந்த வருணதேவன் எதிரே ஓடிவந்து வணங்கினான். ''எந்தையே! எல்லா உலகங்களுக்கும் தந்தையே! அடியேன் உமது ஆணையால் இந்த உலகத்தை ஆட்சி புரிகின்றேன். என் சேவகர்கள் உமது பிதா என்று அறியாமல் நந்தகோபரை இங்கு கொணர்ந்தார்கள் போலும்! அதன் காரணமாக உமது பாத கமலம் எமது உலகத்தில் பட்டது. நாங்கள் செய்த தவம் பலித்தது'' என்று புகழ்ந்து போற்றினான்.

கண்ணபிரான் நந்தகோபருடன் ஆயர்பாடிக்கு வந்து சேர்ந்தார். கோபால ஜனங்கள் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

ராசக்ரீடை

தாருக வனத்து இருடிகள் திருமால் ஜகன்மோகினியாக வந்தபோது அவரை விரும்பினார்கள். அத்தாருக வனத்து முனிவர்கள் கோபிகைகளாகப் பிறந்தார்கள். அத்தவப் பயனைய் அவர்களுக்கு அருள் செய்ய எம்பெருமான் திருவுளங் கொண்டார்.

ஒரு நாள் முழு நிலா. கண்ணபிரான் வேய்ங்குழல் ஊதினார். அந்த கானமாகிய அமுத இசையைக் கேட்ட கோபிகா ஜனங்கள், குடும்பத்தையும் வீட்டையும் மற்ற இச்சைகளையும் துறந்து, தம்மையே மறந்து பிருந்தா வனத்தில் மலரை நாடி வரும் வண்டு களைப் போல் வந்து கண்ணபிரானைச் சூழ்ந்து கொண்டார்கள்.

பரந்தாமன், ஒவ்வொரு கோபிகைக்கு ஒவ்வொரு கிருஷ்ணனுகக் காட்சி யளித்தார். அவர்கள் விருப்பம் தீர அவர்களுடன் விளையாடி அருள் புரிந்தார். அம்மாதரசிகள் வேத வேதங்களாலும் தொட முடியாத இறைவனைத் தொட்டு மகிழ்ந்தார்கள்.

யமுனை நதியில் கண்ணனுடன் இறங்கி நீர் விளையாடல் புரிந்தார்கள். இவ்வாறு ஆடல் புரிந்த பெருமான் சேற்றிலிருக்கும் தாமரை இலையில் நீர் ஒட்டாதது போல், ஆசையற்றவனுக விளங்கினார்.

மலைப் பாம்பை மாய்த்தருளியது

ஒரு நாள் சிவமூர்த்தியை வழிபடும் பொருட்டு, நந்தகோபன் என்ற புண்ணிய சீலன், தனது சுற்றமும் நட்பும் சூழ கோரதங்கள் ஏறி அம்பிகா வனத்தை அடைந்தான். பலதேவரும் கிருஷ்ணரும் உடன் சென்றார்கள்.

அங்கே சிவமூர்த்தியை வழிபட்டார்கள்; வில்வம் அறுகு, ஆத்தி முதலிய பத்திர புஷ்பங்களால் சிவமூர்த்தியை அர்ச்சித்தார்கள். ''தேவ தேவா! மஹாதேவா! அம்பிகை பாகா! அருட்பிரவாகா! கருணைக் கடலே!'' என்று உள்ளம் உருகித் துதி செய்தார்கள்.

அன்று எல்லோரும் உபவாசமாக இருந்தார்கள். இரவில் அந்த வனத்தில் படுத்து நித்திரை செய்தார்கள். பசியால் களைப்புற்றிருந்த ஒரு மலைப் பாம்பு நந்தகோபனைப் பிடித்து விழுங்க லுற்றது. (தொடரும்)



பிறந்தது எப்படி?: குடை





'கொட்டும் மழையா? கொளுத்தும் வெய்யிலா? கவலையில்லை, கொண்டா குடையை' என்று குஷாலாகக் கிளம்புகிறீர்களில்லையா வெளியே? இந்தக் குடையை முதன்முதலில் கண்டுபிடித்தது யார் தெரியுமா? இந்தியர்களாகிய நமக்கு இந்தக் குடை ரொம்ப ரொம்பப் பழைமையான விஷயம்தான். ஆதிகாலத்திலிருந்தே நமக்கெல்லாம் குடை பற்றித் தெரியும். நமது இதிகாசப் புராணங்களில் வெண்கொற்றக் குடையின் கீழ் இருந்து அரசாண்ட மன்னர்களைப்பற்றியெல்லாம் விவரிக்கப்பட்டிருக்கிறது. குடை மன்னர்களின் விருதுகளில் ஒன்று, மதிப்புமிக்கது என்று நமக்கெல்லாம் தெரியும். ஆனால் ஆங்கிலேயர்களுக்கு ஆதிகாலத்தில் குடை ஓர் அதிசயம். ஒரு விதத்தில் நமக்கும் கூடத்தான். புராணங்களில் வர்ணிக்கப்படும் அந்தக் கம்பீரக் குடையைச் சாதாரண மக்கள் உபயோகிக்க முடியுமா? ஆனால் இன்று பரம ஏழையும் குடை பிடித்து நடை போடும் இந்தக் கறுப்புக் குடையை—கண்டுபிடித்தது யார்? எப்போது? அது ஒரு விநோதமான கதை.

ஜோனஸ் ஹான்வே என்பவர் ஒரு வியாபாரி. எதையும் பணம் பண்ணும் திறமை மிக்கவர். உலகம் சுற்றுபவரும்கூட. அவர் போகாத இடமில்லை. பார்க்காத ஊர் இல்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் ஹான்வே பாரசீகத்துக்கு வியாபார விஷயமாகப் போயிருந்தார். ஒரு நாள் கடை வீதியில் நின்று கொண்டிருந்தபோது பாரசீகத்தின் இளவரசர் அவ்வழியாகத் தம் பரிவாரங்கள் சூழ ஊர்வலம் போய்க் கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் இளவரசர் யார் என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் கூடாரம் போன்ற ஒருவகைச் சாதனத்தை, வெயில் அவர் மீது படாதிருக்க அவரது தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு போனார்கள். அது பட்டுத் துணியால் ஆக்கப்பட்டுத் தங்க ரேக்குகளால் பூவேலை செய்யப்பட்டிருந்தது. அதுதான் வெண்கொற்றக் குடை. ஹான்வே வியப்பினால் விரிந்த


விழிகளோடு சிலையாக நின்ருர். அப்படி யொரு சாதனத்தை அவர் அதுவரையில் கண்டதில்லை. கீழை நாடுகளில் அதிகாரத் துக்கும் அந்தஸ்துக்கும் அடையாளமான வெண் கொற்றக் குடை அது என்பது பாவம் அவருக்குத் தெரியாது. ஆனால் அவ ரது வியாபார மூளை வேகமாக வேலை செய்தது. ''சாதாரணக் குடிமகனுக்கும் கிடைக்கும்படி இதை நாம் தயாரித்தால் நல்ல விலை போகுமே'' என்று எண்ண மிட்டவர், அதைச் செயலாக்கினுர். ஆனால் பாவம்! அதை விற்கக் கடை பரப்பின போதுதான் அதிலுள்ள அபாயம் புரிந் தது அவருக்கு. கொற்றவன்தான் குடை நிழலில் வலம் வரலாம். மற்றவர்களுக்கு அந்தத் தகுதி கிடையாது என்பதை அறி யாத மேலை நாட்டவர் அவர். பலன், மன்னனுக்குச் சமமாக மக்களை உயர்த்த முற்பட்டவரைப் பாரசீகத்தி லிருந்தே விரட்டியது அரசாங்கம்.


இதனுல் அந்த ஆங்கிலேய வியாபாரி மனம் தளர்ந்து விடவில்லை. வியாபாரி யாஞலும் மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர் ஹான்வே. பாரசீகத்தின் கொளுத்தும் வெயிலுக்குக் குடை நிழல் தருமானுல் இங்கிலாந்தின் மோசமான மாரிக் காலத்துக்கு அதே குடை பாதுகாப்புத் தராதா என்று எண்ண மிட்டார். மழைக் காலத் தொல்லை தாங்க முடியா தது. வீதியில் நனையாமல் போக முடியாது. செல்வந்தர்களைச் சுமந்து போகப் பல்லக்குகளும், குதிரை இழுக்கும் கோச்சுகளும் உண்டு. ஆனல் சாமானியன் தொப்பலாக நனைந்தே நடக்க வேண்டும்.

பாரசீகத்தின் சாதாரணக் குடிமகன் குடை பிடித்துக் கொண்டு போக முடியா திருக்கலாம். ஆனுல் இங்கிலாந்தில் அப்படி இல்லையே. தாம் அறிந்துவந்த அரிய சாத னத்தைத் தம் நாட்டில் புகுத்தினுல் என்ன என்று திட்டமிட்டார். முதன் முதலாகக் குடை பிடித்துத் தாமே வீதி யில் போவது என்று முடிவு செய்தார்.

அன்று மழை பெய்துகொண் டிருந்தது. அது 1750ம் ஆண்டு ஜனவரி மாதம். காலை வேளை. கோச்சு வண்டிகள் வீதியில் சேற்றை வாரி இறைத்துக் கொண்டு, 'சளக்' 'சளக்' என்று போய்க் கொண் டிருந்தன. இந்த நிலையில் ஜோனஸ் ஹான்வே குடை பிடித்துக் கொண்டு மழையை இலட்சியம் செய்யாமல் அலட்சி யமாக நடக்கலானுர். அவ்வளவுதான். அத்தனை கண்களும் அவரை, அந்த அற்புத சாதனத்தை, மழைச் சாரலிலிருந்துமனி தனைக் காப்பாற்றும் அந்த அற்புதத்தை இமையாத விழிகளோடு பார்க்கலாயின. கோச்சு வண்டிகள் நின்றன. பல்லக்குத் தூக்கிகள் தாங்கள் சுமக்கும் ஸெடானைத் தொப்பென்று கீழே வைத்து விட்டார்கள்; வியாபாரிகள் விற்பனையை மறந்தார்கள். இத்தனை அதிசயத்துக்கும் இலக்காயிற்று ஹான்வே தாங்கி நடந்த குடை. ஜனங்க ளிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. அதே சமயத்தில் கூலிகளிடையே கொதிப் பையும் உண்டாக்கிற்று. மழைக் காலத் தில்தான் கோச்சு வண்டிக்காரர்களுக்கும், பல்லக்குத் தூக்கி களுக்கும் நல்ல வரு மானம் கிடைக்கும். 'நம் பிழைப்பில் மண்ணைப் போட இவன் எங்கிருந்தோ எதையோ கொண்டு வந்து விட்டானே. மழையிலிருந்து காத்துக் கொள்ள மிகச் சுலபமானதாகவும் அதே சமயத்தில் சிக்கன மாகவும் இருக்கும்போலிருக்கிறதே இந்தச் சாதனம்' என்ற நினைப்பே அவர்களின் ஆத்திரத்தை நெருப்பாக்கியது. மழையில் நனையாமல் நடந்து போக வசதியாக ஓர் அமைப்பு இருக்கும்போது இனிமேல் கோச்சையும் பல்லக்கையும் கூப்பிடுவார் களா? ஆகவே ஹான்வேயைத் திட்டி னுர்கள். சேற்றை வாரிவீசினுர்கள். ஏன், குதிரைச் சவுக்கால் அடிக்கவும் முற்பட்டு விட்டார்கள். இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சியவ ரல்லவே ஹான்வே. அறிவாளி களும், பொதுமக்களும் ஹான்வேயின் புதிய கண்டுபிடிப்புக்கு வரவேற்பளித் தார்கள். அதே போன்ற ஒரு சாதனத் தைத் தாங்களும் வைத்துக் கொள்ள விரும் பினுர்கள். ஹான்வேயின் குடை வியா பாரம் நல்ல சூடு பிடித்தது. அவர் வாழ் நாளிலேயே குடையின் புகழ் கொடி கட்டிப் பறக்கலாயிற்று. மடக்கிப் பிரிக்கும் எளிய, மலிவான, குடைகளை உருவாக்கியவர் ஜோனஸ் ஹான்வேதான். சந்தேகமில்லை.

-கிருஷ்ணவேணி





ராட்சதனும் பாட்சதனும்!

வாண்டு மாமா

ரொம்ப ரொம்பக் காலத்துக்கு முன்னாலே ஒரு குருடனும் செவிடனும் நண்பர்களாக இருந்தார்கள். குருடனின் கண்களாகச் செவிடனும், செவிடனின் காதுகளாக் குருடனும் அவ்வளவு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். எங்கு போனாலும் இருவரும் சேர்ந்தேதான் போவார்கள். ஏதாவது கேளிக்கைகளுக்குப் போனால் செவிடன் சொல்லுவான்: '' ஆஹா ! அந்த நாட்டியக்காரிதான் என்னமாக ஆடுகிறாள் ! ஆனால் சங்கீதம்தான் சுகமில்லை'' என்று. குருடனோ, ''சொல்வதானால் பாட்டுத்தான் ரொம்ப இனிமையாக இருந்தது. நாட்டியம் காணச் சகிக்காததாகத்தான் இருக்க வேண்டும்'' என்பான்.

ஒரு சமயம் இவ்விருவரும் கானகத்தின் வழியே போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது வழியில் ஒரு கழுதை எதிர்ப்பட்டது. அது ஒரு வண்ணானுடைய கழுதை. அது தன் முதுகில், துணிகளை வெள்ளாவி வைத்து வெளுப்பதற்குப் பயன்படும் பெரிய சட்டியைச் (சால்) சுமந்து கொண்டிருந்தது. வண்ணானின் கெடுபிடி தாங்காததினால் அது அவனிடமிருந்து தப்பி வந்ததோ, அல்லது வழி தவறி வந்து விட்டதோ தெரியவில்லை.

செவிடன் தன் நண்பன் குருடனிடம், ''அண்ணே ! இதோ வண்ணான் வீட்டுக் கழுதை காட்டுக்கு வந்திருக்கு. அதன் முதுகில் பெரிய சட்டி வேறு இருக்கிறது. கழுதையையும், சட்டியையும் உரிமை கொண்டாடி யாரும் வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன். கழுதையை நாம் ஓட்டிச் சென்றால் என்ன? வழியில் ஏதாவது உபயோகமாக இருக்கும்'' என்றான். குருடனும் தன் தோழனின் யோசனைக்கு இணங்கினான். இருவரும் கழுதையை ஓட்டிக் கொண்டு நடந்தார்கள்.

கொஞ்ச தூரம் போனதும் வழியில் ஒரு பெரிய கட்டெறும்புப் புற்று குன்று போலக் குறுக்கிட்டது. அதில் பளபளவென்று கறுப்பு வைரமாக மின்னும் கட்டெறும்புகள் ரொம்பச் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. ''அண்ணே! இதோ இன்னொர் அதிசயம்!'' என்று குருடனிடம் கூறினான் செவிடன். ''இதைப் போல் இவ்வளவு பெரிய கட்டெறும்புகளை நான் கண்டதே இல்லை. இந்த எறும்புகளில் சிலவற்றை நாம் எடுத்துப் போகலாம். நம் நண்பர்களிடம் காட்டினால் ஆச்சரியப்பட்டுப் போவார்கள்'' என்றான். குருடன் மறுக்கவா போகிறான்? செவிடனிடம் ஒரு வெள்ளிப் பொடி டப்பி இருந்தது. அதில் பொடி இல்லை. காலியாகவே இருந்தது. அதில் ஏழு, எட்டு கட்டெறும்புகளைப் பிடித்துப் போட்டுக் கொண்டான். பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

திடீரென்று காடே நடுங்கும்படியாக இடி அதிர்ந்தது. இருள் கவிந்தது. வானமே பொத்துக் கொண்டதுபோல் மழை கொட்டலாயிற்று. காற்று 'ஊ ஊ' என்று ஆக்ரோஷமாக மழை பெய்ய விடாமல் சீறிற்று. இடையிடையே மின்னல் கண்களைப் பறித்தது. வழியே தெரியாதபடி காற்றுக்கும் மழைக்கும் அப்படியொரு போராட்டம் நடந்தது.

''ஐயோ, அப்பா ! என்ன மின்னல், என்ன மழை! உலகத்துக்கு முடிவு ஏற்படப் போகிறதோ? எங்கேயாவது ஒதுங்கினால்தான் நாம் பிழைப்போம் '' என்றான் செவிடன்.

''மின்னல் அப்படியொன்றும் பயங்கரமானதாக இருக்காது. இந்த இடி... அப்பாடா ! காடே கிடுகிடுக்கிறதே! என் காது செவிடாகிவிடும் போலிருக்கிறது. எங்கேயாவது ஒதுங்கினால்தான் உயிர் பிழைக்கலாம்'' என்றான் குருடன்.

நல்ல வேளையாகக் கொஞ்ச தூரத்திலேயே மலைக்குகை ஒன்று செவிடனின் பார்வையில் பட்டது. குருடன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேக

மாக அந்தக் குகைக்குப் போனான் செவிடன். முதுகில் சட்டியைச் சுமந்தபடி அவர்களைக் கழுதையும் பின் தொடர்ந்தது. குகையினுள் போனவர்கள் அதன் கதவாக இருந்த கல்லைப் புரட்டி மூடிக் கொண்டார்கள், மழைச் சாரல் மின்னல் ஒளி இவைகளிடமிருந்து தப்ப.

அவர்கள் குகை என்று எண்ணிப் போனது உண்மையில் வெறும் குகை அல்ல. அது ஒரு ராட்சதனின் இருப்பிடம். அவன் உணவு தேடி வெளியே போயிருந்தான். பேய்க் காற்றும் மழையும் அந்த ராட்சதனையும் சீக்கிரமே வீட்டுக்குத் திரும்பச் செய்தன. ஆனால் வீட்டுக்கு வந்த அவனுக்கு வியப்புத்தான் காத்திருந்தது. குகையின் வாயில் அழுத்தி மூடப்பட்டிருந்தது. உள்ளே யாரோ நடமாடும் அரவமும் கேட்டது ராட்சதனுக்கு. ''யாரோ மனிதர்கள் உள்ளே புகுந்திருக்கிறார்கள். நமக்கு இன்று நல்ல வேட்டைதான்'' என்று நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டான் ராட்சதன். பிறகு இடியையும் மிஞ்சும் தன் குரலால், ''யார் உள்ளே? உடனே கதவைத் திறவுங்கள். என் வீட்டுக்குள் புகுந்து கொண்டு என்னை வெளியே நிற்க வைத்திருக்கும் மனிதப் பூச்சிகளா, திறவுங்கள் குகைக் கதவை!'' என்று கர்ஜித்தான். காலாலும் கைகளாலும் அப் பெரும் பாறையைப் படபடவென்று உதைத்து உலுக்கினான்.

குகைச் சுவரில் இருந்த ஒரு சிறிய விரிசல் வழியாக வெளியே பார்த்த செவிடனுக்கு உடல் வெடவெடவென்று நடுங்க ஆரம்பித்தது. ராட்சதனை அவன் இதற்கு முன்னால் பார்த்ததே இல்லை. குரலை அவனால் கேட்க முடியாவிட்டாலும் (அவன் தான் டமாரச் செவிடாயிற்றே!) உருவம் குலை நடுங்க வைத்தது. ஆனால் குருடன் பயப்படவில்லை. (ஏனென்றால் அவனால் ராட்சதனைப் பார்க்க முடியாதே!) ராட்சதனின் கர்ஜனைக்குப் பதில் கொடுத்தான் குருடன். ''யாரப்பா, அது! இந்த அகால வேளையில் இப்படிக் கூச்சல் போடும்படி அப்படி என்ன நடந்து விட்டது?'' என்று கேட்டான்.

''என்னையா யாரென்று கேட்கிறாய்? நான்தான் ராட்சதன். இது என்னுடைய வீடு. உடனே கதவைத் திற. இல்லாவிட்டால் உங்கள் உடலில் உள்ள எலும்புகளையெல்லாம் நொறுக்கித் குவித்துவிடுவேன்'' என்று கர்ஜித்தான் அரக்கன். சுவர் இடுக்கு வழியாக ராட்சதனைப் பார்த்துக் கொண்டிருந்த செவிடனுக்குப் பீதியினால் வியர்வை ஆறாகப் பெருக உடம்பு

☐ இந்தக் கதை உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கலாம். இருந்தாலும்கூட இதை மறுபடியும் படிக்கும்போது மகிழ்ச்சி ஏற்படும். சில நல்ல கதைகளை எத்தனை தடவைகள் படித்தாலும் அலுப்பு இல்லை. அத்தகைய கதைகளில் இதுவும் ஒன்று.

-- ஆசிரியர்

வெடவெடவென்று நடுங்க, பேச, நா எழாமல் நின்று கொண்டிருந்தான். ஆனால் குருடனோ கொஞ்சமும் பயமில்லாமல், (அவனால் ராட்சதனைப் பார்க்க முடியாதே!) ''ஓ! நீ ராட்சதனா? பலே, பலே! நீ ராட்சதனானால் நான் யார் தெரியுமா உனக்கு? பாட்சதன்: பாட்சதனைத் தெரியுமா உனக்கு? ராட்சதனை விடப் பொல்லாதவனுக்கும்'' என்றான்.

''பாட்சதனா...'' வியப்பினால் வீரிட்டான் ராட்சதன். ''பாட்சதன்.... பாட்சதன்! இதென்ன முட்டாள்தனம்? பாட்சதன் என்று இதுவரையில் நான் கேள்விப்பட்டதே இல்லையே ?''

''நீ கேள்விப்படாவிட்டால் என்ன? போ, போ! எங்கள் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு இனியும் இப்படிக் கூச்சல் போடுவாயானால் தொலைத்து



விடுவேன், தொலைத்து. தெரியுமா? நான் பாட்சதன். ராட்சதனுக்கு அப்பன்! தெரிந்துகொள்'' என்றான் குருடன்.

''பாட்சதன் என் அப்பனா? அட கடவுளே! பாட்சதன் என் தகப்பனார். இப்படி நான் கேள்விப்பட்டதே இல்லையே. என் அப்பா ஒரு பாட்சதன் என்று எனக்குத் தெரியவே தெரியாதே.''

''இப்போது தெரிந்து கொண்டாயல்லவா? போய்விடு. நான் உன் தகப்பனார். ஆணையிடுகிறேன். ஓடிப் போ!'' என்று கத்தினான் குருடன்.


ராட்சதனுக்குப் பயமும் குழப்பமும் ஏற்பட்டு விட்டன. இத்தனை துணிச்சலாகத் தன்னுடன் வாதாடி விரட்டுவதென்றால் அது மனிதர்களாக இருக்க முடியாதென்று தோன்றியது அவனுக்கு. அதே சமயத்தில் முழு நம்பிக்கையும் ஏற்படவில்லை. உள்ளிருப்போர் தன்னை முட்டாளாக்கத் தந்திரம் செய்கிறார்களோ என்றும் தோன்றியது. ஆகவே ''அப்பா பாட்சதா! நான் போகிறேன். ஆனால் ஒரே ஒரு ஆசை! போகு முன் என் அப்பாவின் முகம் எப்படி இருக்கிறதென்று பார்த்து விட்டுப் போகலாமென்று ஆசைப்படுகிறேன். ஆகவே உன் திருமுகத்தை மட்டும் கொஞ்சம் காட்டுகிறாயா?'' என்று வேண்டினான் ராட்சதன்.

ராட்சதனின் இந்த வேண்டுகோளைக் கேட்ட குருடனுக்கும் செவிடனுக்கும் முதலில் என்ன செய்வதென்று புரியவில்லை. ஆனால் உடனே சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தார்கள். மூடியிருந்த குகைக்கல்லைக் கொஞ்சம் நகர்த்தித் திறந்தார்கள். அதில் தங்களோடு அழைத்து வந்திருந்த கழுதையின் முகத்தை மட்டும் வெளியில் நீட்டச் செய்து, ''சரி, சரி. இதோ என் முகத்தைப் பார்த்து விட்டுப் போய்ச் சேர். தொந்தரவு செய்யாதே'' என்றான் குருடன்.

பாறையின் இடுக்கு வழியாகக் கழுதையின் முகத்தைக் கண்ட ராட்சதனுக்கு உதறல் கண்டது. 'இத்தனை கோரமான முகமா பாட்சதனுக்கு?' என்று நினைத்தான். ஆனாலும் திருப்திப்படவில்லை. ''ஓ, பாட்சதா! என் தந்தையே! உன் திருமுகத்தைக் கண்டேன். திருப்தி கொண்டேன். உண்மையிலேயே நீ என்னை விடப் பயங்கரமானவன்தான். சிலர் பயங்கரமான முகமும் சின்ன உடலுமாக இருப்பார்கள். ஆகவே இத்தனை கோரமான உனக்கு எத்தகைய உடல் என்பதைக் காணவும் ஆசைப்படுகிறேன். உன் திருமுகத்தைக் காட்டியது போல் உன் உடலையும் காண்பி. பார்த்துவிட்டு நான் ஓடியே போய் விடுகிறேன்'' என்றான் ராட்சதன்.

குருடனும் செவிடனும் உடனே வண்ணானின் பெரிய சட்டியைக் கழுதையின் முதுகிலிருந்து இறக்கினார்கள். வெள்ளாவிக்காக அடுப்பில் வைத்து வைத்து அதில் கரி ஏறிக் கறுப்பாக இருந்தது. கதவை இன்னும் கொஞ்சம் திறந்து, ''இந்தா இதுதான் உடல். பார்த்துக் கொள்'' என்று கூறி அந்தப் பெரிய கட்டியை உருட்டி விட்டார்கள் கல் தரையில். மழை இருட்டு. வெளிச்சம் குறைவு. சட்டி தடதடவென்று சத்தமிட்டபடியே உருண்டு வந்தது தரையில். பிரும்மாண்டமான கரிய பொருள் உருண்டு வந்ததைக் கண்டு உண்மையிலேயே ராட்சதன் இப்போது பயந்து போனான். 'எத்தனை பெரிய உடல், எவ்வளவு விகாரமான முகம்? என்னை ஒரே அடியில் அடித்துச் சாப்பிட்டு விடக் கூடியவன்தான் இந்தப் பாட்சதன்!' என்ற முடிவுக்கு வந்தாலும் கூடவே சந்தேகமும் எழுந்தது. ''ஏ, பாட்சதா! உனக்குத்தான் எத்தனை பெரிய கோரமான உடல்! இதே மாதிரிதான் உன்னுடைய சிரிப்பும் இருக்கவேண்டும். எங்கே கொஞ்சம் உரக்கச் சிரி, பார்க்கலாம். அதைக் கேட்டு விட்டு நான் ஓடியே போய் விடுகிறேன். இங்கு நிற்கவே இல்லை'' என்றான். ராட்சதர்களின் சிரிப்பு ரொம்பப் பயங்கரமாக இருக்கும்.

இப்போது செவிடனுக்குப் பயம் தெளிந்திருந்தது. தன் மடியிலிருந்த





வெள்ளிப் பொடி டப்பியை வெளியில் எடுத்தான். அதிலிருந்த கட்டெறும்புகளைக் கழுதையின் காதுகளில், காதுக்கு நாலைந்தாக விட்டான். அவ்வளவுதான்; இத்தனை நேரமாகச் சிறைப்பட்டுக் கிடந்த ஆத்திரத்தில் எறும்புகள் கழுதையை நன்றாகக் காதுக்குள் கடிக்கவே, அது தன் இனிய குரலெடுத்துக் கத்தியது: ''ய்... ஹா..... ய.... ஹா—ஹா—ஹா!'' கழுதை எப்படிக் கத்துமென்றுதான் உங்களுக்குத் தெரியுமே. அதுவும் கட்டெறும்புக் கடியினால் கர்ண கடூரமாகக் கத்தியது! எடுத்தான் ராட்சதன் ஓட்டம். ''போதும் போதும். உன் சிரிப்பு மிக மோசமான ராட்சதனையே கதி கலங்கச் செய்துவிடும். அப்பா பாட்சதா! வாயை மூடிக் கொள். நான் போகிறேன்'' என்று காதை மூடிக்கொண்டு ஓட்டம் பிடித்தான் ராட்சதன். ராட்சதனை இப்படி ஓட்டியதும் செவிடன் கழுதையின் காதிலுள்ளிருந்த எறும்புகளை வெளியில் எடுத்து விடக் கழுதையும் தன் கத்தலை நிறுத்தியது. பிறகு குருடனும் செவிடனும் நிம்மதியாக அன்றிரவைக் கழித்தார்கள்.

காலையில் முதலில் கண் விழித்த செவிடன் பகல் வெளிச்சத்தில் அந்தப் பாழடைந்த குகைக்குள் கொட்டிக் கிடக்கும் பொன்னையும் பொருளையும் கண்டு திகைத்துத் திக்குமுக்காடிப் போனான். உடனே தன் நண்பனான குருடனைத் தட்டி எழுப்பி, ''அண்ணே! அண்ணே! நமக்கு அதிர்ஷ்டமான அதிர்ஷ்டம்! இங்கு தரையெல்லாம் நவரத்தினங்களும், பொற் காசுகளும் குப்பல் குப்பலாகக் குவித்து வைத்திருக்கிறான் ராட்சதன். அவன் சேமித்து வைத்துள்ள இத்தனை செல்வங்களும் நம்முடையவைதான். அவனைத்தான் நேற்றிரவு பயமுறுத்தி விரட்டியடித்து விட்டோமே!'' என்றான். குருடனும் விழித்துக் கொண்டு கைகளால் துழாவி அந்தச் செல்வக் குவியல்களை அனுபவித்து ஆனந்தப்பட்டான். பிறகு இருவரும் அத்தனை செல்வங்களையும் நான்கு பெரிய மூட்டைகளாகக் கட்டினார்கள். ஒன்றைக் குருடனும் மற்றதைச் செவிடனும் தூக்கிக் கொள்ள மீதி இரண்டு மூட்டைகளைக் கழுதையின் முதுகில் இரு பக்கமும் தொங்கும்படியாக கட்டி ஏற்றினார்கள். பிறகு தங்கள் ஊருக்குப் போகக் கிளம்பினார்கள்.



முதல் நாள் இரவு இவர்களால் விரட்டப்பட்ட ராட்சதன் வெகு தூரம் ஓடிப் போய்விடவில்லை. பகல் வெளிச்சத்தில் தனது அப்பாவான பாட்சதன் எப்படி இருக்கிறான் என்பதைக் காண ஓர் இடத்தில் ஒளிந்து காத்திருந்தான். பலபலவென்று விடிந்ததும் தன் குகையின் வாசல் கதவு திறக்கப்படுவதைக் கண்டான் ராட்சதன். முதலில் மூட்டைகளோடு வெளியே வந்தது ஒரு கழுதை. அதன் பின்னே ஒருவன் — செவிடன் - மூட்டையோடு. அவன் தோளைப் பற்றியபடி இன்னொரு மனி



தன் — குருடன் — அவன் தலையிலும் பெரிய மூட்டை. இந்தக் காட்சியைக் கண்ட ராட்சதனுக்கு எப்படி இருந்திருக்கும்? தான் ஏமாற்றப்பட்டோம் என்பதை அறிந்ததும் அவன் ஆத்திரம் இன்னும் அதிகமாயிற்று. ஆனாலும் அவன் ஓர் அசட்டு ராட்சதன். குருடனையும் செவிடனையும் ஒரே அடியில் தீர்த்திருக்கலாம். அவர்களிடம் ஏதோ ஒரு பயம் ஏற்பட்டிருந்தது அவனுக்கு. ஆகவே தன் தோழர்களாக இன்னும் ஆறு ராட்சதர்களை அழைத்துக் கொண்டு அவர்களைத் துரத்திப் பிடிக்க முற்பட்டான். ஒரு ராட்சதனுக்கே உதறல் கண்ட செவிடனுக்கு ஏழு ராட்சதர்கள் துரத்தி வருவதைக் கண்டதும் எப்படி இருக்கும்?

செவிடனால் பேசவே முடியவில்லை. மிகவும் சிரமத்துடன் குழறியபடி ''அண்ணே! ஏழு ராட்சதர்கள் நம்மைத் துரத்தி வருகிறார்கள். இப்போது என்ன செய்வது? நாம் தொலைந்தோம்'' என்று கூறி நடுங்கினான். ஆனால் தைரியசாலியான குருடன் பயப்படவில்லை.

''பயப்படாதே! மூட்டைகளை அருகில் உள்ள ஒரு புதரில் மறைத்து வை. ஒரு பெரிய மரத்துக்கு என்னை அழைத்துக்கொண்டு போ. முதலில் நான் மரத்தின்மீது ஏறுகிறேன். பின்னால் நீ ஏறிக்கொள். அவர்களிடமிருந்து நாம் எப்படியும் தப்பிவிடலாம்'' என்று கூறினான் குருடன். செவிடன் தன் தோழனின் யோசனைப்படியே செய்தான்.

ராட்சதர்கள் மரத்தடிக்கு வந்தார்கள். திருடர்கள் இருவரும் மரத்தின் மீது கைக்கு எட்டாத தூரத்தில் போய் உட்கார்ந்திருப்பதைக் கண்டான் ஏமாந்த ராட்சதன். உடனே தன் ராட்சதத் தோழர்களை ஒருவர் மீது ஒருவராக நிற்கச் செய்து அவ்விருவரையும் பிடித்து விடுவது என்று திட்டமிட்டு அதன்படியே செயல்படலானான்.

குருடனின் தோள் வழியாக ராட்சதர்களின் இந்தத் துணிகரச் செயலைக் கண்காணித்துக் கொண்டிருந்த செவிடனுக்கு ரொம்பப் பயமாகப் போய் விட்டது. குருடனின் தோள்களை இறுகப் பற்றிக் கொண்டான், பீதியினால்.

குருடனுக்குக் கண் தெரியாததனால் அவன் மரக் கிளையில் சரியாக உட்காரவில்லை. ராட்சதர்கள் எப்படி எங்கு வருகிறார்கள் என்பதும் அவனுக்குத் தெரியாது. திடீரென்று செவிடன் பிடித்து அழுத்தவே, நிலைதடுமாறிய குருடன் பிடி தளர்ந்து தான் உட்கார்ந்திருந்த கிளையிலிருந்து உருண்டு மேலே வந்து கொண்டிருந்த ஏழாவது ராட்சதன்மீது பொத்தென்று விழுந்தான். குருடனுக்குத் தான் எங்கே விழுந்தோம் என்பதும் தெரியாது. ஏதோ இன்னொரு மரக் கிளையில் தவறி விழுந்ததாக எண்ணி அதைப் பற்றிக் கொள்ள இரு கைகளையும் விரித்து அதற்குள் அகப்பட்டதைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டான். அவன் கைக்குள் அகப்பட்டது ஏழாவது ராட்சதனின் இரு காதுகளும்தான். பதற்றத்திலும் பயத்திலும் குருடன் தன் கைக்குள் சிக்கிய காதுகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். திடீரென்று தம்மீது வந்து விழுந்து தன் காதுகளையும் பிடித்துக் கொண்டதினால் நிதானம் தவறிய அந்த ராட்சதன் அப்படியே சரிய எல்லா ராட்சதர்களும் ஒருவர் மீது ஒருவராக மரத்தடியில் மூட்டைகளாக விழுந்தார்கள். எல்லோருக்கும் மூச்சு முட்டிற்று. பத்திரமாக இதையெல்லாம் மரத்தின் மீதிருந்து பார்த்துக் கொண்டிருந்த செவிடன் ''அண்ணே, சரியான வேலை செஞ்சீங்க. கவலைப்படாதீங்க, கைப்பிடியையும் விடாதீங்க, உங்களுக்கு ஆபத்து ஒண்ணுமில்லே'' என்று தைரியம் கூறிக் கொண்டிருந்தான். ஆனால் கீழே இறங்கி வரவில்லை. குருடன் தன் பிடிக்குள் சிக்கியது ஏதோ பனை ஓலை என்ற நினைப்பில் அதை முறுக்கித் திருகிக் கெட்டியாக்கிக் கொண்டான் தன் பிடியை.

கீழே உருண்டு விழுந்த ராட்சதர்களில் குருடன் கையில் காதுகளைச் சிக்க விட்ட ராட்சதனைத் தவிர மற்ற ஆறு பேரும் தட்டுத் தடுமாறி எழுந்திருந்து விடுவித்துக் கொண்டு, தங்கள் நண்பனுக்கு உதவிக்கு வந்ததினால் கிடைத்த பலன் போதுமென்று எடுத்தார்கள் ஓட்டம். ஏழாவது ராட்சதன் காதுகளைக் குருடன் கைக்குள் கொடுத்திருப்பவன்தான் செல்வங்களுக்கு உரியவன். தன் நண்பர்கள் தன்னைக் கைவிட்டு ஓடுவதைக் கண்டதும் அவனுக்கும் பயம் பற்றிக்கொண்டது. உண்மையிலேயே இவ்விருவரும் தங்களைவிடப் பலசாலிகள் தான் என்ற முடிவுக்கு வந்தான். தப்பினால் போதுமென்று தன் பலம் கொண்ட மட்டும் கைகளினால் குருடனைப் பிடித்துத் தள்ளிக் காதுகளை விடுவித்துக் கொண்டு ஓட்டம் எடுத்தான். காதின் ஒரு பகுதி குருடன் கைக்குள் அறுந்து சிக்கிக்கொண்டது. அந்த எரிச்சல் வேறு அவன் ஓட்டத்துக்கு வேகம் கூட்டியது!

ராட்சதர்கள் எல்லோரும் ஓடியபின் செவிடன் மரத்திலிருந்து கீழே இறங்கி வந்து குருடனைக் கட்டிக் கொண்டு கூத்தாடினான். ''சரியான பாடம் கற்பித்

திங்க. அண்ணே! அந்த ராட்சதப் பயல்களுக்கு. என்னால் கூட இப்படி அவர்களைச் சமாளித்திருக்க முடியாது. ஆனால் பாருங்க, நான் மரத்திலிருந்து எத்தனை வேகமாத் தெரியுமா உங்க உதவிக்கு ஓடி வந்தேன்'' என்று நடித்தான் செவிடன். அவன் ஓர் அயோக்கியன், ஏமாற்றுக்காரன்.

காட்டைக் கடந்து கிராமத்துக்குப் போகும் சமயத்தில் செவிடன் சொன்னான்: ''அண்ணே! நம்ம இத்தனை செல்வங்களோடு ஊருக்குள் போனால் ஆபத்து. ஊர்க்காரங்க நம்மை ஏமாற்றிப் பிடுங்கிக்குவாங்க. ஆகவே, நாம் இதைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுவோம். காட்டில் ஓர் இடத்தில் ஒளித்து வைப்போம். கொஞ்சம் பொருளுடன் கிராமத்துக்குப் போவோம்'' என்றான், அயோக்கியனான செவிடன். குருடனை ஏமாற்றவே இப்படிச் சொன்னான். குருடனுக்கு இது தெரியாது: நல்ல எண்ணத்துடன்தான் நண்பன் தனக்கு யோசனை கூறுவதாக எண்ணி ஏற்றுக் கொண்டான்.

செவிடன் தன் மூட்டை, கழுதையின் மீதிருந்த இரண்டு மூட்டைகள் ஆக மூன்று மூட்டைப் பொருள்களையும் ஒரு புதரில் ஒளித்து வைத்துவிட்டுக் குருடனின் மூட்டையை மட்டும் இரு பாகமாகப் பங்கிட்டான். ''அண்ணே! எல்லாப் பொருள்களையும் சமமாகப் பங்கு போட்டுட்டேன். இதோ உன் பங்குக்கான சொத்து. இதை உன் இஷ்டப்படி செய்துக்கோ'' என்று அவன் கைகளைப் பற்றி அவன் முன்னாலிருந்த குவியலில் வைத்தான். கண் தெரியா விட்டாலும் நான்கு மூட்டைகளாகக் கட்டிய பொருள்களின் அளவு உத்தேசமாகத் தெரியாதா குருடனுக்கு? தடவிப் பார்த்தவனுக்கு அப்போதுதான் தான் ஏமாற்றப்பட்டோம் என்பது புரிந்தது. ''தம்பி! இது நியாயமில்லே. இவ்வளவு தானா நாம் கொண்டு வந்த செல்வம்? என்னை ஏமாற்றப் பார்க்கிறே நீ'' என்றான். ஆனால் செவிடனோ ''அண்ணே! அப்படியெல்லாம் பழியாகச் சொல்லாதே. சந்தேகமானால் இதோ என் முன்னால் உள்ள குவியலையும் தடவிப் பாரு'' என்றான்.

குருடன், செவிடன் முன்னாலிருந்த குவியலையும் தடவிப் பார்த்தான். அதே அளவுதான் இருந்தது. ஆனாலும் அவனுக்கு நம்பிக்கைப் படவில்லை. ''தம்பி! நான் குருடன் என்பதற்காக ஏமாற்ற நினைக்கிறாயா? இது அநியாயம், அடுக்காது. நீ சிநேகிதத் துரோகம் செய்கிறாய்'' என்றான் குருடன் மிகுந்த ஆத்திரத்துடன்.

The following particulars regarding the ownership of the GOKULAM, the Tamil fortnightly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication :* Madras
2. *Periodicity of its Publication :* Fortnightly
3. *Name of Printer and Publisher :* R. Ananthanarayanan
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-600031
4. *Name of Editor :* T. Sadasivam
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-600031
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital :*
   Bharathan Publications Pvt. Ltd., 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-600031.

R. Ananthanarayanan,
1-3-73 *Publisher*


''கத்தப் பேத்தல், கண்டபடி உளறாதே'' என்று கத்தினான் செவிடன்.


''பேத்தலோ, கத்தலோ. நீ ஒரு வஞ்சகன். ஆதியிலிருந்தே என்னை மோசம் செய்திருக்கிறாய். மோசக்காரா!''

''மோசக்காரனுமல்ல, வேஷக்காரனும் அல்ல.''

இப்படியே வார்த்தைகள் தடித்தன. முடிவில் குருடன் பளீரென்று ஓர் அறை கொடுத்தான் செவிடனின் கன்னத்தில். செவிடனின் காதுகள் 'ஙொய்' என்று ரீங்காரமிட்டன. செவிடனும் சுளீரென்று ஓர் அடி கொடுத்தான் குருடனின் முகத்தில்.

என்ன ஆச்சரியம்! செவிடனின் அடியில் குருடனின் கண் பார்வை பளீரென்று தெரியலாயிற்று. குருடனின் அடியினால் செவிடனின் காதுகள் கணீரென்று கேட்கலாயின. குருடனால் பார்க்க முடிந்தது! செவிடனால் கேட்க முடிந்தது! இருவருக்கும் புதையல் கிடைத்ததை விட மகிழ்ச்சியான மகிழ்ச்சி. செவிடன் தன் துரோகத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டான். புதையலை இருவரும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். எப்போதும் போல் இருவரும் நல்ல நண்பர்களாக நெடுங்காலம் வாழ்ந்திருந்தார்கள்.


ஷீலாவைக் காணோம்
கதை : வாண்டுமாமா— சித்திரம் : ரமணி..
5
கடத்தல்காரர்கள் டைகரை இழுத்துத் தங்கள் காருக்குள் போட்டுக் கொண்டு கிளம்பி விட்டார்கள். போலீஸ்காரர் ஓடி வந்தும் பயனில்லை...
நான் கீழே விழுந்த பையனைத் கவனிக்கறதிலே இருந்ததாலே ஏமாந்துட்டேன் சார்... இல்லே சார்.. கார் நம்பரையும் கவனிக்க முடியல்லே... ஆமா சார்.....
கடத்தல்காரர்களுக்கு டைகரைச் சமாளிப்பது பெரும்பாடாக இருந்தது...
மது, அந்தச் சனியனை உதைத்து வெளியில் தள்ளு. நாம் இப்போது நகரை விட்டு வெகு தூரம் வந்து விட்டோம்.
கார் மின்னல் வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. ஒரு பக்கம் கிடு கிடு பள்ளம்—கதவைத் திறந்து டைகரைக் காலால் உதைத்து வெளியே தள்ளுகிறான் ஒருவன்...
வலிமை மிக்க அக்கொடியவனின் உந்துதலைப் பாவம் அந்த வாயில்லா ஜீவனால் தாங்க முடியவில்லை. காரின் வேகம் வேறு. மலைப் பள்ளத்தாக்கில் பரிதாபமாக....


நல்லவர்களை ஆண்டவன் கை விடுவதில்லையல்லவா? மலைச்சரிவில் உருண்டு வந்த டைகரை ஒரு மரத்தின் கிளை, இலைக் கரங்களால் ஏந்திக் கொண்டது.
தப்பிய டைகர் உடனே அந்தக் காரைத் தொடரத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டது.
விரைவில் ரஸ்தாவை அடைந்த டைகர், கார் சென்ற வழித் தடத்தைப் பின்பற்றி ஓடியது…
ஓ… ஓடி, ஓடி முடிவில் அந்தக் கயவர்களின் கார் நிற்குமிடத்தைக் கண்டு பிடித்து விட்டது.
ஆஹா, அந்தக் கார்தான். அவர்கள் அருகிலிருக்க வேண்டும். என் ஷீலாவும் இருப்பாள். இதை மீண்டும் உளவு பார்க்க வேண்டும்.
இது எந்த இடம். ஏதோ மலை வாசஸ் தலம் போலிருக்கிறது. அருகில் வேறு வீடுகளையே காணோம்… என் டைகரை இந்தப் பாவிகள் உதைத்து வெளியே தள்ளினார்களே, அதற்கு ஆபத்து இல்லாதிருக்க வேண்டுமே, ஆண்டவா.
தொடரும்…



நானாவும் புனாவும்

ரேவதி

பம்பாயிலிருந்து வந்திருந்த ஒற்றன் தான் கொண்டு வந்திருந்த செய்தியை நானாவிடம் கூறிக் கொண்டிருந்தான்.

''அவர்களுடைய திட்டத்தை வெற்றி பெறாது தடுக்க வேண்டும். இது உங்களால்தான் முடியும். இதை இப்படியே அனுமதித்து விட்டால் புனாவின் பாதுகாப்புக்கே ஆபத்தாக முடியும்'' என்று கூறிய ஒற்றன் விடை பெற்றுச் சென்றான். நானா கவலையோடு அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தார்.

நானா யார் என்பது உங்களுக்கெல்லாம் தெரிய வேண்டாமா? சத்ரபதி சிவாஜி அமைத்த மராட்டிய அரசு, அவரது மறைவுக்குப் பிறகு வலிமை இழந்து பல சிறு பிரிவுகளாகப் பிரிந்து, பேஷ்வாக்களால் ஆளப்பட்டு வந்த காலம் அது. புனாவை ஆண்ட பேஷ்வாவுக்கு நிதி, நிர்வாகம் போன்ற எல்லாத் துறைகளிலும் உதவி வந்த அமைச்சர்கள் பட்னவிஸ் என்று அழைக்கப்பட்டனர். இந்தப் பட்னவிஸ் பதவியை வகித்தவர்களில் புகழ் மிக்கவர் தான் நானா.

நானாவுக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் பாலாஜி ஜனார்த்தன பானு என்பதாகும். தமது பெற்றோர்களைப் போலவே நானாவும் மதப் பற்றும் தெய்வ நம்பிக்கையும் கொண்டவராக இருந்தார். வீரம், அறிவு, தெய்வ நம்பிக்கை மிக்க சிவாஜி போன்ற மராட்டியத் தலைவர்களின் வரலாற்றைக் கேட்டு மனம் பறிகொடுத்த நானா, தாமும் அவர்களைப் போலவே தாய் நாட்டுக்குத் தொண்டு புரிய வேட்கை கொண்டார். இயற்கையாகவே அவருக்கு அமைந்து விட்ட அறிவுத் திறன் இதற்குப் பெரிதும் உதவியது. அவரது பதினான்காவது வயதிலேயே பேஷ்வாவுக்கு வலது கரம் போன்ற பொறுப்பு மிக்க பட்னவிஸ் பதவி அவருக்குக் கிடைத்தது என்றால், நானாவின் அறிவுத் திறமையைப் பற்றி வேறு என்ன கூற வேண்டும்?

அப்பொழுது இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் பரவத் தொடங்கி விட்டது. அவர்களுடைய ஆதிக்கத்தை ஏற்க மறுத்த இராஜ்யங்களில் புனாவும் ஒன்று. பம்பாயில் இருந்த ஆங்கில கவர்னருக்குப் புனாவின் மேல் ஒரு கண் இருந்தது. எப்படியாவது பேஷ்வாவைத் தமது செல்வாக்குக்குப் பணிய வைத்து, புனாவைத் தங்கள் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்துவிட அவர் தீவிர முயற்சி செய்தார். ஆனால் அறிவுத் திறன் மிக்க நானா அதற்கு இடம் கொடுக்கவே இல்லை.

இருப்பினும் அப்பொழுது இருந்த பேஷ்வாவுக்கு ஆங்கிலேயர்களிடம் பெருமதிப்பு இருந்தது. அதற்குக் காரணம் நானாவுக்கு மக்களிடையே இருந்த செல்வாக்குத்தான். நானாவின் செல்வாக்கை அழித்து ஆங்கிலேயர்களின் பாதுகாப்பில் வந்து விடக்கூட அவர் தயாராக இருந்தார். ஆனால் மக்களுடைய அன்புக்குப் பாத்திரமாக இருந்த நானாவை வெளிப்படையாகப் பகைத்துக் கொள்ள அவர் அஞ்சினார். நானாவுக்கும் இது தெரியும். பேஷ்வாவைத் தமது பிடியிலிருந்து நழுவ விட்டு விட்டால் அவர் ஆங்கிலேயர்களுக்கு இடம் கொடுத்து விடக்கூடும், அது புனாவுக்கே ஆபத்தாக முடியலாம் என்று எண்ணிய நானா, பேஷ்வாவின் விருப்பத்துக்குத் தாமும் சிறிது இணங்கி வர எண்ணினார்.

எனவே பம்பாயில் உள்ள ஆங்கில கவர்னரின் பிரதிநிதியாக ஓர் அதிகாரி புனாவில் வந்து தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அவர் தம்மோடு எந்த விதமான படைகளையும், ஆயுதங்களையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று நானா கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார். அந்த அதிகாரி தமக்குத் தேவையான துணி மணிகள், உணவுப் பண்டங்கள், குதிரைகளுக்குத் தேவையான புல், கொள் போன்ற எதை வேண்டுமானாலும் பம்பாயிலிருந்து கொண்டு வந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

எப்படியோ புனாவில் கால் வைக்க அனுமதி கிடைத்து விட்டதை எண்ணி கவர்னருக்கு மகிழ்ச்சி. தன் நண்பர்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டதை எண்ணிப் பேஷ்வாவுக்கு மகிழ்ச்சி. கவர்னரின் பிரதிநிதியாக மாலட் துரை என்பவர் புனாவுக்கு வந்து தங்கினார்.

சிறிது காலம் சென்றது. கொடுத்த வாக்குறுதிக்குக் கட்டுப்பட்டு மாலட் துரை நடந்து கொண்டார், புனா அரசுக்கு எதிராக எதுவும் செய்வதற்கில்லை என்ற நம்பிக்கை பேஷ்வாவுக்கு ஏற்பட்டது. அதனால் மாலட் துரையைக் கௌரவிக்க மேலும் வேறு ஏதாவது சலுகை அளிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். நானாவுக்கும் அந்த எண்ணம் இருந்ததால், மாலட் துரைக்குத் தேவையான பொருட்களை ஏற்றிக் கொண்டு பம்பாயிலிருந்து வாரத்துக்கு ஒரு முறை வரும் வண்டிகளைச் சோதனையிடாது அனுமதிக்க விசேஷ சலுகை அளிக்கப்பட்டது.

சில நாட்கள் ஓடின. தமது வண்டிகளைச் சோதனையிட மாட்டார்கள் என்று உறுதி ஏற்பட்டதும், மாலட் துரை சில படைக் கருவிகளை மறைத்து எடுத்து வர விரும்பினார். அதன்படி சிறு பீரங்கிகள், வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் போன்றவற்றைப் புல் வண்டிக்குள் மறைத்து எடுத்து வர ஏற்பாடு செய்தார். ஒற்றறிவதில் திறமை பெற்ற நானாவின் பணியாட்களுக்கு இது தெரிந்து விட்டது. உடனே நானாவுக்கும் செய்தி வந்து விட்டது.


நானாவுக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. வண்டிகளைச் சோதனையிடப் பேஷ்வா இசைய மாட்டார். மேலும் அது கொடுத்த சலுகையைப் பறிப்பதோடு ஆங்கிலேயர்களை அவமானப்படுத்தியதாகி விடும். ஒருவேளை கடைசி நேரத்தில் மாலட் துரை, மனம் மாறி, ஆயுதங்களை அகற்றி விட்டு வெறும் புல் வண்டியை மட்டும் ஓட்டி வந்து, சோதனையில் ஒன்றும் சிக்கவில்லையென்றால் பெரிய ஆபத்தாக முடிந்து விடுமோ? வண்டியைப் பேஷ்வாவே சோதனையிட ஆணை இட வேண்டும். அதுவும் தற்செயலாக நடப்பது போல் இருக்க வேண்டும். இதற்கு என்ன வழி? நானாவுக்கா திட்டம் தீட்டத் தெரியாது?

அன்று மாலை பேஷ்வாவின் மாளிகைக்குச் சென்றார் நானா. ஏதேதோ பேசிக் கொண்டே பேஷ்வாவை மாளிகையின் சாளரத்துக்கு அழைத்து வந்தார். சாளரத்துக்குக் கீழே மக்கள் நடமாட்டம் மிக்க ராஜ வீதி. அந்த வீதியின் வழியாகத்தான் மாலட் துரையின் வண்டி சென்றாக வேண்டும்.

பேஷ்வா தம்முடைய விரலில் விலை மிக்க மோதிரம் ஒன்றை அணிந்திருந்தார். அது சத்ரபதி சிவாஜி அணிந்திருந்ததாம். அதனால் அதை உயிருக்கும் மேலாகப் போற்றி வந்தார் பேஷ்வா.

தூரத்தில் மாலட் துரையின் வண்டி வருவதை நானா கவனித்து விட்டார். உடனே பேஷ்வாவிடம் "உங்கள் மோதிரத்தைக் கழற்றுங்கள். எண்ணெய் இறங்கி விட்டாற் போல் தோன்றுகிறதே?" என்று கேட்டார். அவருடைய எண்ணத்தை அறியாத பேஷ்வா மோதிரத்தைக் கழற்றி நானாவிடம் கொடுத்





தார். நானா அதைக் கையில் எடுத்துக் கொண்டு உற்றுப் பார்த்தார்.

மாலட் துரையின் வண்டி அவர்கள் நின்று கொண்டிருந்த சாளரத்துக்குக் கீழே வருவதற்கும் நானா மோதிரத்தை நழுவ விடுவதற்கும் சரியாக இருந்தது. நானா பதறிப் போனார். ''பரவாயில்லை நானா, நல்ல காலமாக மோதிரம் மாலட் துரையின் புல் வண்டிக்குள் தான் விழுந்தது. நான் பார்த்தேன். எங்கும் போய் விடாது'' என்று கூறிய பேஷ்வா கீழே இறங்கினார்! நானா இதற்காகத்தானே இவ்வளவு தந்திரமும் செய்திருந்தார்!

மாலட் துரையின் வண்டி நிறுத்தப் பட்டது. தம் பணியாட்களை அழைத்து வண்டிக்குள் மோதிரத்தைத் தேடக் கட்டளையிட்டார். வண்டியின் பின்னால் வந்து கொண்டிருந்த மாலட் துரை நடுங்கிப் போனார். ''என் விடுதிக்குச் சென்றதும் நானே தேடிப் பார்த்து, மோதிரத்தைக் கண்டுபிடித்து அனுப்புகிறேனே'' என்று அவர் பேஷ்வாவைக் கெஞ்சினார். பேஷ்வாவுக்குத் துரையின் கெஞ்சல் வேடிக்கையாக • இருந்தது. ''வழியில் மோதிரம் எங்கேயாவது விழுந்து விடும். எதற்காக உங்களுக்குத் தொந்தரவு? என் பணியாட்கள் தேடி விடுவார்கள்'' என்று கூறிவிட்டார் பேஷ்வா. இதற்குள் வேடிக்கை பார்க்க மக்களும் கூடிவிட்டனர்.

பேஷ்வாவின் ஆட்கள் வண்டிக்குள் இறங்கித் தேடத் தொடங்கினர். வண்டிக்குள்ளிருந்து மோதிரம் மட்டுமா கிடைத்தது? சிறு பீரங்கிகள், துப்பாக்கிகள், வெடி குண்டுகள் எல்லாமே வெளியே எடுக்கப்பட்டன! பேஷ்வா திகைத்துப் போனார்! இதை அவர் எதிர்பார்க்கவே யில்லை. மாலட் துரை தலை குனிந்தார். மறு நாள் பேஷ்வாவின் தர்பாரில் தம்முடைய நம்பிக்கைத் துரோகத்தை மன்னிக்கும்படி வெளிப்படையாகக் கேட்டுக் கொண்டதால் மாலட் துரைக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. 'நானா இருக்கும்வரை புனாவைப் பற்றிக் கனவில்கூட நினைக்காதீர்கள்' என்று மாலட் துரை பம்பாயில் உள்ள தமது கவர்னருக்குக் குறிப்பு எழுதினார்!

புனாவில் இருந்த பேஷ்வாவின் தர்பார் நானாவைக் காரணமாகக் கொண்டு உலகப் புகழ் பெற்றது. புனா அரசை வெறுத்த டில்லி பாதுஷா, மைசூர் மன்னர் திப்பு சுல்தான் போன்றவர்கள் கூட நானாவின் அறிவுத் திறனைக் கேள்விப்பட்டு, அதை நேரில் காண விரும்பி, மாறுவேடம் அணிந்து வந்திருக்கிறார்களாம். பதினேழாம் நூற்றாண்டின் தலைசிறந்த மேதைகளில் நானாவும் ஒருவர் என்று ஆங்கிலேயர்கள் எழுதி வைத்துள்ளார்கள். நானாவின் அறிவுத் திறனையும், தெய்வ நம்பிக்கையையும், நாட்டுப் பற்றையும் விளக்கப் பல கதைகளை இன்னமும் மராட்டிய மக்கள் நாட்டுப் பாடல்களிலும் கர்ண பரம்பரைக் கதைகளிலும் விளக்கி நினைவு கூர்ந்து வருகிறார்கள். இவை தெனாலி ராமன், அக்பர், பீர்பால் கதைகளைப் போல் அழியா வரம் பெற்றவை.

குடையை எத்தனை நாட்களாக விரிக்கப் பிடித்துக் கொண்டிருப்பது? மழையைத்தான் காணோம்!



புகைப்படம்: ரமா ராமநாதன்



மலர்ந்த வாழ்வு

எஸ். ஆர். சின்னசாமி

பச்சைக் கொடியில் சிவப்பு ரோஜா
பூத்துச் சிரிக்குது — அதைப்
பார்க்கப் பார்க்க அழகு வண்ணம்
அள்ளிச் சொரியுது.

இளந் தென்றல் காற்றில் மலர்
ஆடிக் குலுங்குது — மணத்தை
எங்கும் வாரி இறைத்து இன்பம்
ஊட்டி மயக்குது.

தொட்டுப் பார்த்தால் பட்டு மென்மை
இதழில் இருக்குது — மலரைச்
சுற்றிச் சுற்றி வண்டுக் கூட்டம்
மொய்க்க நெருங்குது.

சொட்டி நிற்கும் தேனை ஈக்கள்
உறிஞ்சிக் குடிக்குது — இதைச்
சொல்லும் போதே நாக்கில் எச்சில்
ஊரத் தொடங்குது.

மலரைப் பறித்து மணத்தை நுகரக்
கையும் துடிக்குது — ரோஜா
மலரைக் காக்கக் கூரிய முள்
செடியில் வாழுது.

மலரைப் பறித்து மாலை கட்டிச்
சூடி மகிழுவோம் — நாளும்
மலரைப் போல் சிரித்த முகமாய்க்
கூடி வாழுவோம்.



குறுக்கு வழியில் செல்லாதே!



எஸ். கோபால்

குறும்பு செய்து மற்றவர்க்குக்
குட்டி எலி மகிழ்ந்தது
வரம்பு மீறி, செய்யும்குணம்
நாளுக்கு நாள் வளர்ந்தது.

திருட்டு வழியில் சுலபமாகத்
திருடித் தின்று மறைந்தது
வீட்டிலிருந்து இழுத்து உண்டு
வீணில் உறங்கி வந்தது

எறும்பு ஒன்று அன்புடனே
எலியின் நண்பனானது
குறுக்கு வழியில் செல்லாதே
குற்றமது என்றது.

நண்பன் சொன்ன பேச்சைக் கேட்டு
நமட்டுச் சிரிப்புச் சிரித்தது
பண்புடைய பேச்சை அது
புறக்கணித்து நின்றது

அன்று இரவு நண்பன் மொழியை
அகற்றித் திருடச் சென்றது
நன்றி மறந்து சென்ற எலி
நடுப் பொறியில் சிக்கியது.

எலியைக் காக்க முடியாமல்
எறும்பு தேம்பி அழுதது
வலியச் சென்று வீழ்ந்த எலி
வருத்த முற்றுப் பார்த்தது.

தாயின் எலும்பிலே தோன்றியது மனித சமுதாயம்

ஒவ்வொரு நாட்டிலும் அதன் பழைமையை விளக்கும் வரலாற்றுக் கதைகள் உண்டு. அவைகளுக்கு இதிகாசங்கள் என்று பெயர். அக்கதைகளை இன்று நாம் படிக்கும்போது சற்று விசித்திரமாக இருந்தாலும் அவைகளால் அந்நாட்டுப் பண்டைய மக்களின் நாகரிகத்தையும் கலாசாரங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.

மேலை நாட்டில் கிரேக்க நாகரிகம் மிகப் பழைமையானது. நம்மிடையே வழங்கும் இதிகாச புராணங்களைப் போலவே கிரேக்கர்களுக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க கதைகளும் கடவுளர்களும் உண்டு. ஜூபிடர்தான் அவர்களுடைய முழுமுதற் கடவுள். அவருடைய கருணைமிக்க ஆட்சியால் பூலோகம் செழிப்புற்று விளங்கியது. யாருமே எந்த வேலையும் செய்ய வேண்டியதில்லை. மரங்களில் பழங்கள் தானாகவே காய்த்துக் குலுங்கும். உழுதலோ, விதைத்தலோ இன்றி நிலங்களில் தானியங்கள் விளைந்தன. யாரும் எவ்விதக் குற்றமும் இழைப்பதில்லை யாகையால் தண்டனைக்கு அவசியமே இருந்ததில்லை.

இப்படிப்பட்ட ஒரு காலத்தைக் கிரேக்கர்கள் பொற்காலம் என்று கூறுகின்றனர். இதையடுத்து வெள்ளிக் காலம். இது அத்தனை மகிழ்ச்சி நிறைந்ததில்லை. மனிதன் பருவங்களின் பலாபலன்களை அறிய வேண்டி யிருந்தது. கடுங் குளிர் காலத்தின் துன்பத்தை அனுபவிக்க வேண்டி யிருந்தது. உழைத்தால்தான் உணவு கிடைத்தது.

வெள்ளிக் காலத்தை அடுத்துப் பித்தளைக் காலம். (நம் புராணங்களில் நான்கு யுகங்கள் இல்லையா, அதே போல). இதில் யுத்தமும் சூழ்ச்சியும் தோன்றலாயின. கருத்து வேறுபாடுகள் கைகலப்பில் வந்து முடியலாயின.

நான்காவதாக வருகிறது இரும்புக் காலம். மிகமிக மோசமான நிலை இந்தக் காலத்தில்தான். குற்றம் புரிவது மனிதனின் அன்றாட அலுவல்களில் ஒன்றாகி விட்டது. யுத்தமோ தவிர்க்க முடியாததாகி விட்டது. நேர்மை மறைந்துவிட்டது. மக்கள் கடவுளின் நினைவே இல்லாமல் போய்விடுகிறார்கள்.

இந்த நிலையில் வழக்கமாகப் பூவுலகத்தைச் சுற்றிப் பார்க்க வரும் ஜூபிடர் ஒரு நாள் கிரேக்க நாட்டின் ஆர்கேடியா என்னுமிடத்தில் வந்து இறங்குகிறார். மக்களின் தாழ்வுற்ற நிலையையும் அவர்கள் நடத்தும் மோசமான வாழ்க்கையையும் காண்கிறார். குற்றவாளிகளான பூலோகவாசிகளைப் பெரு வெள்ளத்தைக் கொண்டு அழிக்க முடிவு செய்கிறார்.

தம்கீழ் பணி புரியும் மற்றக் கடவுளர்களை அழைத்து ஆணைகள் பிறப்பிக்கிறார். 'தெற்குத் திசைக் காற்று சீறவேண்டும். பேய் மழை கொட்ட வேண்டும். ஏரி, நதிகள் நிறைந்து உடைப்பெடுத்து, ஊருக்குள் புகுந்து நாசம் விளைவிக்க வேண்டும். நெப்டியூன் கடலைப் பொங்கச் செய்து அலைகளால் நகரங்களை மூழ்கடிக்க வேண்டும். இவையே தேவதேவனான ஜூபிடரின் ஆணைகள்.

இந்த நிலையில் ஜூபிடரிடம் சிறைப் பட்டிருந்தான் புரோமதியஸ் என்பவன். வருங்காலத்தை அறிந்து முன்னாலேயே கூறக் கூடிய ஒப்பற்ற சக்தி படைத்தவன். ஜூபிடரின் திட்டத்தைத் தன் மகனான டுகாலியனுக்கு (Deucalion) முன் கூட்டியே தெரிவித்து விட்டான் புரோமதியஸ். டுகாலியன் உடனே ஒரு பெரிய படகைக் கட்டினான். அதில் பிராணிகள்,



உணவுப் பொருள்கள், தன் உடைமைகள் அத்தனையையும் நிரப்பினான். தன் மனைவி பிர்ஹா (Pyrrha)வுடன் அப் பெருந் தோணியில் தாவி ஏறினான். அதே சமயம் நெப்டியூனின் ஆணைப் படி கடல் பொங்கியது. கரை கடந்து நாட்டுக்குள் புகுந்தது.


வெறி கொண்ட கடல் டுகாலியனின் படகைப் பந்தாடியது. பல நாட்கள் கடல் அலைகளால் அலைக்கழிக்கப்பட்ட படகு கடைசியாக ஒரு மலையடிவாரத்தில் ஒதுங்கியது. நிலத்தில் கால் வைத்த டுகாலியனும் பிர்ஹாவும் ஜூபிடருக்கு ஒரு செம்மறி ஆட்டைப் பலியிட்டுப் பிரார்த்தனை செய்தார்கள். உலகில் தம்மை நினைப்பவர்களும் இருக்கிறார்கள் என்பதினால் கோபம் தணிந்த ஜூபிடர் வெள்ளத்தை வடியச் செய்தார்.

பூமியில் எஞ்சியிருந்த மனிதர்களான இவ்விருவரும் பெரு வெள்ளத்தால் நாசமான பூமியின்மீது நடந்து நடந்து ஒரு கோயிலை அடைந்தார்கள். அது ஜூபிடரின் ஆலயம். அங்கு மறுபடியும் ஜூபிடருக்குப் பிரார்த்தனை செலுத்தினார்கள். இந்தத் தடவை கடவுளர்களின் கடவுளான ஜூபிடர் தமது தூதுவனான ஹெர்மஸ் மூலம் டுகாலியனுக்கு ஒரு செய்தி அனுப்பினார்.

''இங்கிருந்து கிளம்புங்கள். உங்கள் பின்னால் உங்கள் தாயாரின் எலும்புகளைப் போட்டுக் கொண்டு போங்கள்.'' இதுதான் ஜூபிடரின் செய்தி. முதலில் டுகாலியனுக்கு இதன் பொருள் விளங்கவில்லை. சிந்திக்கச் சிந்திக்க அதன் பொருள் விளங்கலாயிற்று. கடவுளர் பூமியைத் தாயார் என்று குறிப்பிடுவது நினைவுக்கு வந்தது. ஆகவே பூமித் தாயின் எலும்புகள் கற்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள் தம்பதிகள். ஆகவே தலையை முக்காடிட்டு மூடிக்கொண்டு இரு கைகள் நிறையக் கற்களை அள்ளி அவைகளை ஒவ்வொன்றாகத் தங்கள் தோள் வழியே பின்னால் வீசிக்கொண்டே நடந்தார்கள். அவர்கள் ஊகம் சரியாக இருந்தது. டுகாலியன் வீசிய கற்களெல்லாம் ஆண்களாகவும் பிர்ஹா போட்ட கற்கள் எல்லாம் பெண்களாகவும் தோன்றினார்கள். இப்படி உண்டானவர்களால் பூவுலகில் புதிய மனித சமுதாயமே உருவாகியது. இப்படிச் சொல்லுகிறது கிரேக்க இதிகாசம். இது நம் இந்திய இதிகாசத்தில் வரும் நான்கு யுகங்கள்--கலியுக முடிவில் உலகம் அழிவது — மறுபடியும் ஜீவராசிகள் தோன்றுதல் என்ற கதையோடு ஒட்டி வருகிறதில்லையா?

—விகேயெம்





சுண்டு குண்டு சீமாத் தாத்தா

—சாமா—

''டேய் சுண்டு, ரயிலுக்கு நாழியாகிக் கொண்டிருக்கிறது. சீக்கிரம் உங்கள் துணி மணிகளைக் கட்டியாச்சா? ஏ, குண்டு! ஏண்டா நிக்கறே? அந்தப் படுக்கையைக் கட்டேன். கூஜா எங்கேடா? பாட்டி என்னடா பண்ணறு? அதென்னடா மூட்டை?'' என்று இப்படியெல்லாம் வீடு அமளிதுமளிப் பட்டது. சீமாத் தாத்தா குடும்பத்தோடு ஸ்தல யாத்திரை கிளம்பிக் கொண்டிருக்கிறார்.

டாக்ஸி ரயில்வே ஸ்டேஷனை அடைந்ததுதான் தாமதம். சுண்டுப் பயல் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான். ''தாத்தா! நம்ம வீட்டு இரும்புப் பீரோவை எடுத்து வர மறந்துட்டேளா?'' என்றான்.

''டேய், கிண்டலா பண்ணறே?'' என்றார் தாத்தா மறுபடியும் கோபத்துடன்.


''கிண்டலுமில்லை, சுண்டலுமில்லை. அதிலேதான் நம்முடைய பிரயாணத்துக்கான டிக்கட்டுகளை வைத்துப் பூட்டினேம். அதை நீங்கள் ஞாபகமாக எடுத்து வந்தீர்களோ?'' என்று சுண்டுவும் குண்டுவும் கூச்சல் போட, சீமாத் தாத்தா அதே டாக்சியில் மறுபடியும் சிட்டாய்ப் பறந்தார் வீடு நோக்கி.

சீமாத் தாத்தா டிக்கட்டுகளுடன் இரும்பி ஓடோடி வந்தார். ரயில் கிளம்ப ஐந்தே நிமிஷங்கள்தான் இருந்தன. அவசரம் அவசரமாக எல்லோரும் எதிரில் இருந்த பெட்டியில் சாமான்களைத் திணித்துத் தாங்களும் ஏறிக் கொண்டார்கள். உடனே அந்த ரயில் பெட்டிக்குள்ளிருந்து ''இறங்கு—இறங்கு!'' என்று கூச்சல் கிளம்பியது. அவர்கள் ஏறிய பெட்டி ஸ்திரீகள் கம்பார்ட்மெண்ட்! பாட்டிக்கு மட்டும்தான் அங்கு இருக்க அனுமதி. மற்றவர்கள் மூட்டை முடிச்சுக்களுடன் வேறொரு பெட்டிக்குப் பறந்தார்கள். அவசரம் அவசரமாக ஒரு பெட்டியில் ஏறி மூட்டைகளையும் பெஞ்சுக்கு அடியில் திணித்தார் தாத்தா. அப்போதுதான் பார்த்தார், ஒரு பெட்டி சரியாகப் பூட்டப்படாமலிருப்பதை! கீழே இருந்த அதை எடுத்து மேலே பலகையில் வைக்கத் தொடங்கியதும் ரயிலும் ஏக ஆர்ப்பாட்டத்துடன் கிளம்பியது. அந்த ஆட்டத்தில் தாத்தா மேலே வைத்த பெட்டி 'தடால்' என்று கீழே உட்கார்ந்திருந்த ஒருவர் தலையின் மேல் விழுந்தது.

வந்ததே அவருக்குக் கோபம்! அந்தப் பெட்டியை அப்படியே ரயிலுக்கு வெளியில் தூக்கி வீசினார். சீமாத் தாத்தா சளைத்தவரா? ''இதோ உம்ம பெட்டியையும் வெளியே எறிகிறேன், பாரும்!'' என்று இன்னொரு பெட்டியை எடுத்து வெளியே எறியப் போகும் போது பாய்ந்தார்கள் சுண்டுவும் குண்டுவும். ''தாத்தா நிறுத்துங்கள். அவர்தான் ஆத்திரத்தில் நம் பெட்டி என்று நினைத்துத் தம் பெட்டியையே வெளியே எறிந்து விட்டார். நீங்களுமா அப்படி?'' என்றார்கள். உடனே எல்லோரும் 'கொல்' என்று சிரிக்க, பெட்டியை எறிந்தவர் திணறிப் போனார்.

''ரயிலை நிறுத்து! எங்கே அபாயச் சங்கிலி?'' என்று ஓடினார் அந்த அப்பாவி.

''ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'' என்றார் தாத்தா. ''நீங்கள் மட்டும் என்ன வாழ்ந்தீர்களாம்? நாங்கள் தடுக்காவிட்டால் உங்கள் பெட்டியையே நீங்களும்தான் ஆத்திரத்தில் வெளியில் விட்டெறிந்திருப்பீர்கள்!'' என்றார்கள் சுண்டுவும் குண்டுவும்.



ஜெட் விமானமும் ரேடாரும்

எஸ். தங்கவேலு

டாண்...டாண்...டாண்...டாண்

. பாலு வீட்டுக் கடிகாரம் ஐந்து முறை அடித்தது. பாலுவின் வீட்டுக்குள் ரகுவும், நந்தகுமாரும் காத்துக் கொண்டிருந்தார்கள். இந்த மூன்று பேரும் இணைபிரியாத நண்பர்கள். பாலு கடைக்குப் போனவன் இன்னும் திரும்பி வரவில்லை. பாலுவுக்காகத்தான் ரகுவும் நந்துவும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

பாலுவின் அப்பா ஈசிசேரில் சாய்ந்து கொண்டிருந்தார். அவர் ஒரு டாக்டர்.

இதற்குள் ஏதோ 'பட்'டென்று சத்தம் கேட்டது. ரகு திரும்பிப் பார்த்தான். வேறு ஒன்றுமில்லை. நந்துவின் கண்ணுக்கு நேரே ஒரு கொசு வந்திருக்கிறது. அதை இரண்டு கைகளாலும் அவன் அடித்து நசுக்கி யிருக்கிறான். அந்தச் சத்தம்தான் அது.

''பார்த்தாயாடா?'' பெரிய சாதனையைச் செய்த வீரனைப் போல் ரகுவைப் பார்த்தான் நந்து.

''போடா பெரிய இவன். கண்ணுக்கு நேரே வருகிற பூச்சியை அடிச்சுக் கீழே போடறது பெரிய விஷயமா?'' என்று வாய் விட்டுச் சொன்னான் ரகு.

இதையெல்லாம் ரொம்ப நேரமாகக் கவனித்துக் கொண்டிருந்த டாக்டர் மாமா சிரித்தார். இரண்டு பேரையும் பக்கத்தில் கூப்பிட்டார்.

''நான் ஒரு கதை சொல்லட்டுமா?'' என்று கேட்டார்.

''சொல்லுங்கோ மாமா!'' என்று இருவரும் ஒரே சமயத்தில் கோரஸ் பாடினார்கள்.

மெதுவாக டாக்டர் ஆரம்பித்தார்.

''ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தாராம். அவர் பெரிய அறிவாளி. அவர் நாட்டில் இரண்டு ரேடார்கள் இருந்தன.''

'' 'ரேடார்'னா என்ன மாமா?'' என்று சந்தேகத்தைக் கிளப்பினான் நந்து.

''ரேடார் என்பது ஒரு மின்சாரக் கருவி. வெகுதூரத்தில் — நூறு, இருநூறு மைல்களுக்கப்பால் ஒரு விமானம் வந்தால்கூட, ரேடார் மூலம் அதைப் பார்த்துவிடலாம். அதனுடைய வேகம் திசை எல்லாவற்றையுமே கண்டு பிடித்து விடலாம். அதுமட்டுமல்ல, ராஜாவின் ரேடார் டெலிவிஷன் போலவும் வேலை செய்யும்'' என்று டாக்டர் ஒரு பெரிய விளக்கம் கொடுத்ததும் இரண்டு பேருமே தலையை ஆட்டிக்கொண்டார்கள். அப்புறம் கதையைத் தொடர்ந்தார் டாக்டர் மாமா.

அந்த ராஜாவுக்கு இரண்டு ரேடார்கள் இருப்பதாகச் சொன்னேனல்லவா? அந்த ரேடாரை வைத்துத்தான் நாட்டில் என்னென்ன நடக்கிறது என்று ராஜா பார்ப்பார். அதை வைத்துத்தான் அவர் ஆட்சி செய்து வந்தார்.

அந்த ரேடார்களுக்கு முன் இரண்டு இரும்புத் திரைகள் உண்டு. ரேடாருக்கு ஏதாவது ஆபத்து வருகிறது என்று வைத்துக் கொள்வோம். உடனே திரைகளை இறக்கி ரேடார்களை மூடி விடுவார்கள்.

இப்படி இருக்கும்போது ஒரு நாள் ஏதோ 'விர்'ரென்று சத்தம் கேட்டது. உடனே ரேடாரின் மூலம் பார்த்தார் ராஜா. ஏதோ ஒரு பொருள் வந்து



கொண்டிருப்பது தெரிந்தது. ரேடார்ப் பிரிவிலுள்ள விஞ்ஞானிகள் குழு அதைப் பார்த்து அந்தப் பொருளினுடைய உருவம், உயரம், அளவு, வேகம் எல்லாவற்றையும் கண்டுபிடித்து விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்தார்கள். கடைசியில் அது ஒரு ஜெட் விமானம் என்று தெரிந்தது. உடனே, 'ஒரு ஜெட் விமானம் நமது ரேடாரை நோக்கி வந்து கொண்டிருக்கிறது' என்று அவர்கள் ராஜாவுக்குச் செய்தி அனுப்பினார்கள்.

அந்த விமானம் ரேடாரின் மேல் மோதிவிடுமோ என்று பயந்தார் ராஜா. அது மோதிவிட்டாலும் ஒன்றும் ஆகி விடாது. ஆனால் ரேடாரின் மென்மையான பாகங்கள் கெட்டுப் போனாலும் போய்விடுமல்லவா? ஆதலால் ஏதாவது செய்து ரேடாரைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தார் ராஜா. கடைசியில் இரண்டு வழிகள் அவரது நினைவுக்கு வந்தன.

ஒன்று...

போர்ப் படைகள் இரு புறமும் காத்து நிற்கின்றன. அவற்றை விரைவில் புறப்படும்படி கட்டளையிட வேண்டும். இரண்டு பக்கமும் அவை சுற்றி வளைத்து வந்தால் நடுவில் விமானத்தை வைத்து நொறுக்கி விடலாம். ஆனால் படைகள் தயாராகிச் சென்று தடுப்பதற்கு அதிக நேரமாகி விடுமே! அதற்குள் விமானம் ரேடாரில் மோதிவிட்டால்...? ஆகையால் இதற்கு முன்பாகவே ஏதாவது ஒன்று செய்தாக வேண்டும்.

இரண்டாவது...

ரேடாரைத் திரை போட்டு மூடிவிட வேண்டும். இது ரொம்பச் சீக்கிரம் செய்யக் கூடிய வழி. 'பட்'டென்று ஸ்விட்சை அழுத்தினால் போதும். ரேடாரின் முன்னால் திரை விழுந்து மறைத்துவிடும். அப்புறம் அந்த விமானத்திடமிருந்து ரேடார் தப்பித்து விடும்.

ஆகையால் முதலில் ரேடார் கண்ட்ரோலிங் ஸ்டேஷனுக்கு, "திரைகளைப் போட்டு ரேடாரை மூடுங்கள்" என்று செய்தி அனுப்பினார்.

அடுத்ததாகப் படைத் தலைவர் இருவருக்கும் ஒரு கட்டளை இட்டார்.

"நம் ரேடாரை நோக்கி ஒரு ஜெட் வந்து கொண்டிருக்கிறது. அது மோதினாலும் அதிக நஷ்டம் ஏற்பட்டு விடாது. இருந்தாலும் ரேடாரைப் பாதுகாப்பதற்காக அந்த ஜெட்டை நொறுக்கி விட வேண்டும்.

உங்கள் விமானங்களை ஜெட்டின் இரண்டு பக்கமும் கொண்டு வாருங்கள். பின் அதைச் சுற்றி வளைத்து நொறுக்கி விடுங்கள். இதோ அந்த ஜெட் விமானம் வந்து கொண்டிருக்கிறது. அதன் வேகத்துக்கு ஏற்றாற்போல் நீங்களும் வேகத்தை மாற்றிக் கொண்டு நெருங்குங்கள். தப்ப விட்டு விடாதீர்கள்."

ஒன்... டூ... த்ரீ.

முதல் கட்டளை முடிக்கப்பட்டது.

'பட்' என்று திரை விழுந்து ரேடாரை மூடியது.

அதற்குள் இரண்டு பக்கமும் வந்த படைகளிடமிருந்து ஜெட் தப்ப முடியவில்லை. அது சுடப்பட்டுக் கீழே விழுந்து நொறுங்கியது.

"அப்பாடா" என்று பெருமூச்சு விட்டார் ராஜா. ரேடாரின் திரை உயர்த்தப்பட்டது. படைகள் பழைய நிலைக்கு வந்தன.

ஒரு பெரிய ஆபத்திலிருந்து ரேடார் தப்பியது."

இப்படிக் கதையை முடித்தார் டாக்டர் மாமா.

"அடேயப்பா! ஒரு விமானத்தை நொறுக்கி ரேடாரைக் காப்பாத்தறது அவ்வளவு கஷ்டமா மாமா?" என்று வாயைப் பிளந்தான் ரகு.

"அது மட்டுமில்லேடா. இவ்வளவு கதையும் நடந்தது எவ்வளவு நேரத்திலே தெரியுமா? ஒரே ஒரு செகண்டிலே" என்றார் டாக்டர்.

"அதெப்படி மாமா?" நந்து, ரகு இரண்டு பேருமே புரியாமல் விழித்தார்கள்.

"அதுதாண்டா! சற்று முன்பு நந்து ஒரு கொசுவை அடித்தானில்லையா? அதுக்கு ஒரே ஒரு செகண்ட்தானே ஆகியிருக்கும்? நம்ம மூளை வேலை செய்து எப்படி அந்தக் காரியத்தை முடிக்கறதுங்கறதைத்தான் நான் கதையாகச் சொன்னேன். 'ஜெட் விமானம்'னு சொன்னேனே அதுதான் கொசு. நந்துவோட மூளை தான் ராஜா!"

"இரும்புத் திரை வந்து நம் கண் இமை. ரேடார் நம் கண்தானே மாமா?" என்று முந்தினான் நந்து.

"ஆமாம்! போர்ப் படைகள் நம்மோட கைகள். கண்ட்ரோலிங் ஸ்டேஷன், விஞ்ஞானிகள் குழுங்கிறதெல்லாம் மூளையின் வெவ்வேறு பகுதிகள்" என்று முடித்தார் டாக்டர் மாமா.

நந்து வெற்றிச் சிரிப்போடு ரகுவைப் பார்த்து இப்படிக் கேட்டான்: "இப்பச் சொல்லுடா! கண்ணுக்கு நேரே வருகிற கொசுவை அடிக்கறது அவ்வளவு இலேசான விஷயமா?"

"இல்லேடா நந்து!" என்று அசடு வழியச் சிரித்தான் ரகு.


சிரிக்கச் சிரிக்க!...

—மாலா—



''உன் நண்பன் உனக்கு ஒரு சாக்க
லேட்டும் உன் தங்கைக்கு எட்டு சாக்கலேட்டுக
ளும் கொடுத்தால் மொத்தம் எவ்வளவு?''


''கூட்டிப் பார்க்க வேண்டிய சமயமா
இது? என் நண்பனின் ஏரவஞ்சனைக்கு
வந்து கேட்க அல்லவா ஓடுகேன்!''



''ஐயா, சட்டிக்காரரே! நீர் இங்கே நிற்கிறதினாலே ஒரு பஸ் கூட இங்கு நிற்காமல் போகிறது. தயவு செய்து கொஞ்சம் தள்ளிப்போய் நில்லும்!''




''யாரு இட்டாமணியா? உன்னைச் சிறு வயசிலே பார்த்தது. இப்போ ஆளே தலைகீழா மாறிட்டயே?''



''ஊரிலே 'பவர் கட்' மும்முரம் போல இருக்கே. உங்க வீட்டிலே உள்ள விசிறி ஏசியா, டிவியா, இல்லே ஓசியா?''

''அவை எதுவும் இல்லே. இது காசி விசிறி!''






லெட்டர் பாம்!

கிட்டு

புரட்சியாளர்கள் தபால் கவரில் வெடிகுண்டுகளை அனுப்புகிறார்கள் என்னும் செய்திகளைப் பத்திரிகைகளில் இப்போதெல்லாம் அடிக்கடி படிக்கிறீர்களில்லையா? அம்மாதிரி நாசம் விளைவிக்கும் மோசமான காரியத்தைச் செய்யாமலேயே நீங்களும் உங்கள் நண்பர்களுக்கு 'லெட்டர் பாம்' அனுப்பலாம். தபாலில் கூட அனுப்ப வேண்டாம். நேரில் கையிலேயே அந்தக் கவரைக் கொடுங்கள். அவன் அந்தப் பரிசுக் கவரைப் பிரித்ததும்....?


முதலில் செய் முறையைச் சொல்லுகிறேன். ஒரு கவரைத் தயார் செய்து கொள்ளுங்கள். கெட்டியான காகிதத்தில் நீங்களே கவர் செய்யலாம். இல்லாவிடில் கொஞ்சம் கனமான காகிதத்தினாலான கவராகப் பார்த்து ஒன்று வாங்கிக் கொள்ளுங்கள் கடையில். அதற்குள் கச்சிதமாக நுழையும்படியாக ஒரு கார்டு போர்டை' (அட்டையை) வெட்டிக் கொள்ளுங்கள். கீழேயுள்ள படத்தில் முதலில் காட்டியுள்ளபடி பேப்பர் கிளிப்புகள் இரண்டைப் பிரித்து அதைப்போல வளைத்துக் கொள்ளுங்கள். இரண்டாவது படத்தில் காட்டியுள்ளபடி கவருக்குள் நுழைப்பதற்குத் தேர்ந்தெடுத்துள்ள கார்டு போர்டில் இரு வெட்டு வாய்களை ஏற்படுத்தி அதில் பேப்பர் கிளிப்பில் வளைத்த கம்பிகளை படத்தில் காட்டியுள்ளபடிச் செருகுங்கள்.



இனி இரண்டு ரப்பர் பாண்டுகளை எடுத்துக்கொண்டு அவைகளை இரண்டாக மடியுங்கள். சின்ன உலோக வளையம் ஒன்றைத் தேடிப் பிடியுங்கள். உலோக வளையம் கிடைக்கா விட்டால் பிளாஸ்டிக் வளையம் கிடைத்தாலும் போதும். அதற்குள் இரண்டாக மடித்த இந்த இரண்டு ரப்பர் பாண்டுகளையும் நுழைத்து அவைகளின் இரு மடிப்புக்களையும் ஒன்று சேர்த்துப் பேப்பர் கிளிப்பினுள் நுழையுங்கள். (படம் 2) இனி அந்த உலோக அல்லது பிளாஸ்டிக் வளையத்தை ஒரே திசையில் ரப்பர் பாண்டுகள் இறுக்கமாகும் வரையில் சுற்றுங்கள். சுற்றும்போது பேப்பர் கிளிப்புகள் புரண்டு விடாமல் விரல்களால் அழுத்திக் கொள்ள வேண்டும். ரப்பர் பாண்டை 'டைட்'டாகச் சுற்றியானதும் அது துள்ளி விடுபட்டுச் சுற்றுப் பிரியாதபடி கையால் அழுத்தியவாறு அப்படியே அந்தக் கார்டு போர்டு அமைப்பைக் கவருக்குள் வைத்து மூடி ஒட்டி விடுங்கள்.

இனி கவரின்மீது விலாசம் எழுதி அதை உங்கள் நண்பனிடம் நீட்டி "உனக்கு ஒரு பரிசு, இந்தா!" என்று கொடுங்கள். அவன் மகிழ்ச்சியோடும் ஆவலோடும் கவருக்குள் ஏதோ பரிசு இருப்பதாக எண்ணி அதைப் பிரிப்பான்.

அடுத்த விநாடி துள்ளிக் குதித்த அவன் மிரளுவான். ஏன் தெரியுமா? கவரின் வாய் கிழிக்கப்பட்டதும் கவரினுள் முறுக்கேற்றி வைத்துள்ள ரப்பர் பாண்டின் முறுக்குப் பிரியும். அப்போது கிளிப் 'படீர்' என்று நிமிரும். உலோக வளையம் 'விர்' என்று சுழலும். இவை எதையும் எதிர்பாராத உன் நண்பன் திகைத்துத் தவித்துப் பீதி அடைவது இயற்கைதானே? கொடுத்துப் பாருங்கள் உங்கள் நண்பனுக்கு இப்படி ஒரு லெட்டர் பாம் பரிசை! அவன் மருளுவதைக் கண்டு நீங்கள் மகிழலாம். இதனால் அபாயம் ஏதுமில்லை.



பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
ஏய், பாலு! காகித ஏரோப்ளேன் விட றேன்னு இப்படி ஓடித் தோட்டத்திலுள்ள பூச்செடிகளையெல்லாம் நாசமாக்க றியே.
பாலுத்தம்பி! ஓடியா, உனக் கொரு பார்ஸல் வந்திருக்குது.
என்னது, எனக்கா பார்ஸல்?... ஆமா, ஹையா...
அப்பா இதோ பாத்தியா, விசையிலே பறக்கற ஏரோப்ளேன். மாமா அனுப்பி இருக்கார்!
நல்லவேளை! இனிமேல் வீட்டிலுள்ள காகிதங்களும் தோட்டத்துப் பூச் செடி,காய்கறிச் செடிகளும் பிழைக்கும்.
அப்பா, இதிலுள்ள குறிப்புகளின் படி ஏரோப்ளேனைப் பொருத்திட்டேன். பறக்க விடறேன் பாக்கறியா?
ஐயையோ...! கண்ணாடி ஜன்னல் வழியாகக் கிளம்பிட்டுதே...
மடக்கழுதை! இம்மாதிரி விசைப் பொம்மைகளை யெல்லாம் வீட்டுக்குள் வைத்தா முடுக்கி விடுவார்கள்? தடியா...
டேயப்பா! என்னமாப் பறக்குது? இதுக்குள்ளே சின்ன எஞ்சினே இருக்கு போலி ருக்கு. இங்கி ருந்து விடலாம். எப்படி மேலே கிளம்பறதுன்னு பார்ப்போம்.
ஐயோ, மறுபடியும் அப்பாவோட அலுவலறையின் கண்ணாடியை... ராகவா...




மறுபக்கத்தை யும் விடல் லியே.... ஐயையோ...!
ஸ்...ஸ்...ஸ்
பா...ஹா... இந்த வீட்டை நாசம் பண்ணு முன் கொண்டு வா அந்த ஏரோப்ளேனை இங்கே. அதை எப்படி விடணும்னு நான் சொல்லித் தரேன்...
பாத்தியா? இப்படி ஒரு கயிற்றைக் கட்டிக் கொண்டால் ஒரு கட்டுப் பாட்டோடு அது பாட்டுக்குச் சுத்திச் சுத்தி வரும், புரிஞ்சுதா?
ஸ்..ஸ்...ஸ்
ஏரோப்ளேன் ஸ்பீடு எடுக்க ஆரம்பிச்சுட்டுது! அப்பா... ஆ... அப்பாடீ...
விஷ்ஷ்ம்
மன்னிச்சுக்குங்க கான்ஸ்டபிள் சார். வந்து... வந்து... அப்படியே இருங்க. ஆ... இதோ...
கிளிச்...
ஐயோ, அப்பா! என் அருமையான ஏரோப்ளேனுக்கு நேர்ந்த கதியைப் பாருங்க.
சீக்கிரம் அப்பா. நீங்க பண்ணித்தரக் காத்த ஏரோப்ளேன் கூடப் பறக்க மாட்டேங்குது. என் பவர் ப்ளேனையும் பாழாக்கிட்டீங்களே...

சாக்லெட் திருடன்

கண்ணனின் அம்மா, ராத்திரி அவன் அப்பா வாங்கி வந்த சாக்லெட் பொட்டலத்தை மேஜையிலேயே வைத்துவிட்டாள். காலையில் பார்த்த போது அதை எறும்புகள் சுற்றிக் கொண்டிருந்தன. அதை எடுத்துத் தட்டி விட்டுக் கண்ணனிடம் இரண்டு சாக்லெட்டைத் தின்னக் கொடுத்த பின் மீதியை ஒரு சச்சதுரமான தட்டில் வைத்தாள். மீதி இருபத்தெட்டு சாக்லெட்டுகள் இருந்தன. அவற்றைத் தட்டில் இங்குள்ளது போல் வைத்தாள். அப்போது அது நான்கு பக்கங்களிலும் எந்தப் பக்கம் எண்ணினாலும் ஒன்பது வருமாறு இருந்தது. இரண்டு சாக்லெட்டுக்களைச் சுவைத்த கண்ணனுக்கு நாக்கில் நீர் சுரந்தது. அம்மா அந்தப் பக்கம் சென்றதும், நான்கு சாக்லெட்டுக்களை எடுத்துக் கொண்டு மீதி இருபத்து நான்கு சாக்லெட்டுக்களைத் தட்டில் அதே போல் எந்தப் பக்கம் எண்ணினாலும் ஒன்பது சாக்லெட் வரும்படி வைத்தான். அம்மா வந்து மொத்தமாக எண்ணாமல் நான்கு பக்கங்களிலும் ஒன்பது ஒன்பது இருப்பதைப் பார்த்து விட்டுப் போய் விட்டாள். ருசி கண்ட கண்ணனின் வாயும் கையும் சும்மா இருக்குமா? மறுபடியும் நான்கு சாக்லெட்டுக்களை எடுத்துக் கொண்டு மீதி இருபது சாக்லெட்டுக்களை நான்கு பக்கங்களிலும் ஒவ்வொரு பக்கம் எண்ணினால் ஒன்பது வரும்படி வைத்து விட்டான். ஆசைக்காரனானாலும் கண்ணன் புத்திசாலி, இல்லையா? அம்மாவை ஏமாற்ற இரு தடவைகளிலும் சாக்லெட்டுக்களைத் தட்டில் எவ்வாறு மாற்றி வைத்தான்?



— பி. எஸ். ராணி



படம். 1

வெட்டி ஒட்டினால்...?

☐ இடப் பக்கமுள்ள சதுரத்தை அதில் குறித்துள்ளபடி மூன்று பாகங்களாக்கி அவைகளைக் கொண்டு ஒரு குடுவை (பானை) தயாரிக்க முடியுமா? முடியும். முயன்றால் முடிக்கலாம்.

— ஏ. தேவராஜு



ஒளிந்திருந்து பார்ப்பதென்ன?

☐ வலப்பக்கம் மேலே உள்ளவர் உங்களைக் கண்டு சிரிக்கிறார். ஏன் தெரியுமா? இவர் உருவானதற்குச் சில ஆங்கில எழுத்துக்கள்தான் காரணம். அந்த எழுத்துக்களை முறைப்படி ஒன்றுசேர்த்தால் உருவாகும் வார்த்தை உங்களுக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவராக இருக்கும். எங்கே கண்டு பிடியுங்கள், அது என்ன வார்த்தை என்று?

— ஏ. வேணுகோபால்

நான் யார்?

○ உடம்பினை வளைத்திருப்பேன் நான், உழைக்கிற உழைப்பாளியல்ல; உயிரில்லா, நான் வாழாப் புத்தகமும் இவ்வுலகில் இல்லை — நான் யார்?

○ வீட்டில் சேர்க்காதவர், என்னை வீதியில் கொண்டு சேர்ப்பர் — நான் யார்?

○ எனக்குக் கையுண்டு, உடம்புண்டு, தலையில்லா முண்டம், காலில்லா நொண்டி — நான் யார்?


— கே. வி. ராஜன்

(விடைகள்)


○ ஒட்டிய பின்.

○ ஒளிந்திருப்பவர் TEACHER.


○ நாங்கள்: கேள்விக்குறி, குப்பை, சட்டை.



படம் 2




முதல் தடவை



இரண்டாம் தடவை





'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்
சந்தா விவரம்: ஒரு வருடம் ரூ. 7-00 ○ ஆறு மாதம் ரூ. 3-50 ○ வெளிநாடுகள் ரூ. 18-00

ஆண்,
ஆளப்பிறந்தவன்.
அவன் துணைவி,
அவனது இதயராணி.
பிள்ளைக் கனியமுது,
பேசும் பொற் சித்திரம்.

இல்லறத்தின்
சுவைக்களனில்
மலர்ந்தவை,
மபத்லால்
துணிமணிகள்!



மெஃப்ரின் எஸ்டர்காட் டெரோஸெல்

எளிய சாயல்களிலும்,
எடுப்பான வண்ணங்களிலும்,
பெருமித பிரிண்டுகளிலும்
'மெஃபரின்' 100% பாலியெஸ்டர்
சேலைகள், பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன் சேலைகள்;
'மெஃபரின்' பாலியெஸ்டர்
இழைகலந்த உடுப்புத்
துணிகள் — இலேசான லான்கள்,
கோடை நிழல் படரும்
கேம்பிரிக்குகள், கோலாகல
நகை மிளிரும் பாப்ளின்கள்;
இன்னெளி மிளிரும்
வண்ணங்களிலே, வரிகளிலே,
கட்டங்களிலே 'எஸ்டர்காட்'
பாலியெஸ்டர் இழைகலந்த
காட்டன் சூட்டிங்குகள்; அதி
நவீனமான அரும்பெரும் அழகு
வண்ணங்களில், பிரிண்டுகளில்
'டெரோஸெல்' பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன்
ஷர்ட்டிங்குகள்.

**மபத்லால்
க்ரூப்**

AIYARS-M.174 TM



everest/122d/PP Tam